இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட
சாறிகள்,
நெடிமேட் ஆடைகளை
நவீன டிசைன்களில்
மனம் போல்
பெற்றுக்கொள்ள
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்
மற்றும்
சுபமுகூர்த்த புடவைகளை
சுலபமே தெரிவுசெய்ய
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஞூ வைகாசி மீ 16 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 5 (30-05 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 99

# பிரேமாவுடன் பேச புலிகள் குழு இவ்வாரம் கொழும்பு செல்லும்!

## ஆசிரிய பென்ஷன் ஓரிரு மாதங்களில்

### அவர்களே அமைச்சில் செய்து முடிப்பர்

கொழும்பு, மே 30

பாடசாலை ஆசிரியர்கள் ஓய்வுபெற்றுத் தமது ஓய்வூதியம் [பென்ஷன்] பெறவருடக் கணக்கில் காத்திருக்கத் தேவையில்லை கல்வி அமைச்சு ஜூலைமாதம்முதல் அமுல் செய்யவிருக்கும் புதியதிட்டத்தின் பிரகாரம் ஓரிரு மாதங்களில் தமது ஓய்வூதியத்தைப் பெறலாம்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## உறவைச் சீராக்க அரசு முயற்சி

யாழ்ப்பாணம், மே 30

ஜனாதிபதி பிரேமதாஸா விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டு பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவதற்காக விடுதலைப் புலிகளின் உயர்மட்ட தலைவர்கள் குழு இந்தவாரத்தில் - இன்னும் இரண்டொரு தினங்களில் - கொழும்பு செல்லும்.

அங்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுடனும், அமைச்சர் ஏ ஸி. எஸ். ஹமீத்துடனும், மற்றும் முப்படைத் தளபதிகளுடனும் விடுதலைப் புலிகள் விரிவாக பேச்சு நடத்துவார்கள்.

*இதற்கிடையில், விடுதலைப் புலிகளுடனான உறவில் ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலையைத் தவிர்த்து, உறவைச் சீராக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.*

கொழும்பு செல்லும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) செயலாளர் நாயகம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

கடந்த திங்களன்று அமைச்சர் ஹமீத் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய போது விடுதலைப் புலிகள் சில விடயங்களை அமைச்சருக்குத் தெளிவுபடுத்திக் கூறியிருந்தனர்.

'' தமிழ் மக்கள் மத்தியில் தற்போது நம்பிக்கையீனம், யுத்தபீதி, அச்சம் ஏற்பட்டி

(5ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். கோட்டை, பலாலிக்கு 'சிங்க ரெஜிமண்ட்' படையினர்

யாழ். கோட்டை பலாலி இராணுவ முகாம்களுக்கும் சிங்கரெஜிமண்ட் படைப் பிரிவினரே பாதுகாப்பு படை உயர்வட்டாரங்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். என்று தெரிய வருகிறது

ஏற்கனவே இந்த முகாம்களில் நிலை கொண்டித்த 'கஜபாகு ரெஜிமண்ட்' படைப் பிரிவினர் தென் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது இடங்களுக்கு தீவிர பயிற்சி பெற்ற ''சிங்க ரெஜிமண்ட்'' படையினர் தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வடமாராட்சியில் நடைபெற்ற 'ஒப்ரேசன் லிபரேசன்' தாக்குதலுக்கு ''சிங்க ரெஜிமண்ட்'' படைப் பிரிவினரே ஈடுபடுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ - 10)

## 4ஆம் திகதி மீண்டும் ஹமீத் யாழ். வருவார்?

யாழ்ப்பாணம், மே 30

வடக்கு - கிழக்கு மாகாணச் சமாதானக் குழுவின் தலைவரும், நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் அடுத்த மாதம் 4 ஆம் திகதியளவில் மீண்டும் யாழ்ப்பாணம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் ஹமீத் வடக்கு கிழக்கு மாகாண சமாதானக் குழுவின் தலைவர் என்ற ரீதியில் தமிழ் மாவட்டங்கள் தோறும் விஜயம் செய்து அங்குள்ள விடுதலைப் புலிகளின் மாவட்டப் பொறுப்பாளர்களையும் ஏனைய தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு உத்தேசித்திருக்கிறார் என்றும் -

இந்த விடயம் குறித்து விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் கலந்தாலோசனை செய்வதற்காகவே அவர் எதிர்வரும் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வர முடிவு செய்திருக்கின்றார் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-10)

மண்டபம் முகாமிலிருந்து வந்த

## 25 அகதிகள் மன்னாரில் கைதாகி விடுவிக்கப்பட்டனர்

### கூட வந்த இந்தியர் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், மே 30

மண்டபம் முகாமிலிருந்து 2 இந்தியர்களுடன் தலைமன்னார் நோக்கி வந்த 25 இலங்கையர்கள் தலை மன்னார் கடல் பிரதேசத்தில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இவர்களது படகில் 11 பொதிகளில் பம்பாய் வெங்காயம் இருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டது.

கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்களில் 23 பேரை தலைமன்னார் கிராம சேவையாளரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர். பின்னர் அவர்கள் விடுதலை

[5ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



பென்ஷன் செய்தி வாத்திமாருக்கு பெரிய ஆறுதலாய் இருக்கும் எண்டு சொல்லுங்கோ......!

## 4 இந்தியர்களும் கொழும்புக்கு

யாழ்ப்பாணம். மே 30

காங்கேசன்துறை பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நான்கு இந்தியர்களும் மேல் விசாரணைக்காக கொழும்புக்கு அனுப்பப் படவுள்ளனர்.

கடத்தல் சம்பவம் தொடர்பாக கடந்த 23 ஆம் திகதி பேசாலைப்பகுதியில் வைத்து இவர்கள் ஸ்ரீ லங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே.

(ஒ-10)

## மைசூர் பருப்பு விலை குறைப்பு

கொழும்பு, மே 30

மைசூர் பருப்பின் விலை ஒரு கிலோவுக்கு ஒரு ரூபா 50 சதத்தால் உடனடியாகக் குறைக்கப்படுகிறது.

இதுசம்பந்தமான உத்தரவை வர்த்தக, வியாபார அமைச்சர் ஜனாப் ஏ. ஆர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் நிலையை ஆராய நோர்வேயில் மாநாடு

ஒஸ்லோ, மே 30

இலங்கைக்கு உதவும் நாடுகளின் பிரதிநிதிகள் குழுஒன்று அடுத்த மாதம் பதினோராம் திகதி நோர்வேயில் நடைபெற உள்ள மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளது.

இலங்கையில் இடம் பெறும் சம்பவங்கள் பற்றிய உண்மை நிலையை ஆராய்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

முன்னாள் யாழ். அரச அதிபரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னனாள் தலைவருமான திரு.

(5 ஆம் பக்கம் பார்க்க]

## பெ. வெங்காயம் உடனடியாக இறக்குமதி

கொழும்பு, மே 30

நான்காயிரம் மெட்ரிக் தொன் பெரிய வெங்காயம் விரைவில் கொழும்பு வந்து சேரவிருப்பதாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் நேற்று அறிவித்தது.

பெரிய வெங்காயம் உடனடியாக 3 ஆயிரம் மெட்ரிக் தொன் தேவைப்படுகிறது. எனினும் 4 ஆயிரம் மெட்ரிக் தொன் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-எ)

## குறிப்பிட்ட காலத்திற்குள் அரச தரப்பு நடவடிக்கைகள்!

மாகாணசபையைக் கலைத்தல், தேர்தலுக்கான திகதியை நிர்ணயம் செய்தல், ஆறாவதுஅரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்துக் குக் கொண்டுவருதல் ஆகிய விடயங்களை -மிகவிரைவில்- ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் செய்து முடிக்க அரசு முடிவு செய்திருப்பதாக நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் உயர் தலைவர்களுக்கும் அமைச்சர் ஹமீத்திற்கும் இடையில் கடந்த திங்களன்று யாழ்ப்பாணத்தில்இடம்பெற்ற பேச்சுக்களின் போது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் சிலவிடயங்களை அரசுசெய்து முடிக்கும் என உறுதியளிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

இந்த விடயங்கள் தொடர்பாக விரைவான நடவடிக்கைகளை எடுப்பதன்மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசுக்கு உள்ள உண்மையான அக்கறையை வெளிப்படுத்த அரசுதரப்பில் முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அரசியல் அவதானிகளின் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

[உ]

மலையகத் தமிழர் பிரச்சினை

## பிரேமா நல்ல முடிவு எடுப்பார்; தொண்டா தெரிவிக்கும் நம்பிக்கை

மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கு அனுப்புவது என்ற சர்ச்சை - பிரச்சினை குறித்து ஜனாதிபதியுடன் பேசியுள்ளேன் இந்த விடயத்தில்நல்லதிர்க்கமானமுடிவை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா எடுப்பார் என்று உறுதி அளித்துள்ளார்.

இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று இரவு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. மெஹ்ரோத்திராவுக்கு இ. தொ. கா. சார்பில் அளிக்கப்பட்ட இராப்போசன விருந்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பலத்த மோதல் ஒன்று ஏற்படும் என்று அச்சம் ஏற்பட்ட நேரத்தில் தனது சாதுரியத்தால் இந்தியப்படை வெளியேறக்கூடிய நிலையைத் திரு, மெஹ்ரோத்திரா ஏற்படுத்தினார் - என்றும் அமைச்சர் தொண்டமான் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

இந்தியத் தூதுவர் நன்றி தெரிவித்துப் பேசுகையில் - மலையகத் தமிழர் பிரச்சினை குறித்து மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு எடுத்துக் கூறுவேன் - என்றார்.

துணை அமைச்சர்களான திரு. செல்லச்சாமி பி. பி. தேவராஜ் ஆகியோரும் இவ் விருந்தில் கலந்து கொண்டனர்.

(அ- 3)

## பாடசாலைக் கல்வித் திட்டத்தில் அடுத்தஆண்டு முதல் பாரியமாற்றம்!

### தொழிற் கல்விக்கு முக்கிய இடம்

யாழ்ப்பாணம், மே 30

தொழிற் கல்விக்கு முதன்மையளிக்கும் விதத்தில் அடுத்த ஆண்டு முதல் பாடசாலை கல்வித் திட்டத்தில் பாரிய மாற்றங்கள் கொண்டு வரப்படவிருக்கின்றன.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கல்விப் பணிப்பாளர்கள் மாநாட்டில் இத் தகவல் வெளியிடப்பட்டது.

புதிய கல்வித் திட்டத்தில் தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில் புகுத்தப்படவிருக்கும் முக்கியநடைமுறைகள் வருமாறு:-

★ பாடசாலையில் ஆண்டு 9 இல் தொழிற்கல்விப் பாடம் ஒன்று கட்டாயமாக்கப்படும்.

ஆண்டு 9 இறுதியில் இப் பாடத்தில் சித்தி பெறும் மாணவருக்கு குறிப்பிட்ட தொழில்கல்விக்குரிய கனிஷ்ட தராதர சான்றிதழ் வழங்கப்படும்.

ஆண்டு 10 முதல் ஆண்டு 13 வரையான நான்கு வருட கல்வி போதனையின் போது தற்போதைய பாடங்களுக்கு மேலதிகமாக இத் தொழிற் பாடம் தொடர்பான சான்றிதழ் கல்வி தொடர்ந்து இடம் பெறும்.

★ 11ஆம் ஆண்டின் இறுதி

(5ஆம் பக்கம் பார்க்க)

வன்செயலில் பலியானோர் உறவினருக்கு ஆசிரியபதவி

## சிங்களத்தில் வந்த சுற்றுநிருபம் சிங்களப் பகுதிகளில்தான் அமுலாம்!

### மாநாட்டில் சொன்னதாக அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், மே, 30

வன்செயலில் உயிர் இழந்தவர்களின் இரத்த உறவினர்களுக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கும் திட்டம் தமிழ் பகுதிகளுக்குப் பொருந்தாது. சிங்களப் பகுதிகளில் மட்டுமே அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

— இவ்வாறு கல்வி, உயர் கல்வி அமைச்சு முடிவு செய்திருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கல்விப் பணிப்பாளர்கள் மாநாட்டில் இம்முடிவு பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டதாகவும் சொல்லப் பட்டது.

''வன்செயலில் உயிரிழந்தோரின் குடும்பத்தவருக்கு பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்று கடந்த 22 ஆம் திகதி உதயனில் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே,

இந்த சாரப்பட கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளிலும் பின்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதுபற்றி நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கல்விப் பணிப்பாளர்கள் மாநாட்டில் தாம் கேள்விகள் எழுப்பியதாக தமிழ் மாவட்டக்கல்விப் பணிப்பாளர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

அப்போது ''இந்த விடயம் சிங்களப் பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும்'' என்று அவருக்கு பதிலளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மகளிர் முன்னணி மாநாட்டில் அரசியல், சமூகத் தீர்மானங்கள்-9

### அடுத்த வேலைத்திட்டங்களும் தயார்

யாழ்ப்பாணம், மே 30

நேற்றுடன் முடிவடைந்த விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் யாப்பு அமைப்பதற்கான மாநாட்டில் பல அரசியல் தீர்மானங்களும் சமுகவியல் சம்பந்தமான தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

மூன்று நாட்கள் நடைபெற்ற பிரஸ்தாப மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றன.

நேற்றைய மாநாட்டுக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உப செயலாளரும் தலைமைச் செயலக உறுப்பினருமான செல்வி சுந்தரி தலைமை வகித்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் யோகரட்ணம் யோகி, திருமதி எ. பாலசிங்கம் மகளிர் முன்னணி பிரதம அமைப்பாளர் செல்வி ஜெயா, யாழ். மாவட்ட மகளிர் முன்னணி பொறுப்பாளர் செல்வி மாலினி மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள், முன்னணியின் உறுப்பினர்கள் பலரும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இறுதி நாளான நேற்றைய மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

★ தமிழ் -முஸ்லிம் மக்க

[5ஆம் பக்கம் பார்க்க]

### சுப நேரம்

30- 5 - 90

புதன்கிழமை வைகாசி16

சுபநேரம்!

04.22 -05.52

இராகுகாலம்

11·52 - 01.22

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பல வண்ணங்களில்வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரான்லி அக்குசியம், 37/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (மஸ்கன் கட்டிட அருகில்) (3725)

### கோழிக்குஞ்சுவிநியோகம்

ஒரு மாத Hylineவெள்ளை சிவப்பு, சறுப்பு, பேட்டுக் குஞ்சுகள் (தடுப்பூசி போடப் பட்டது) விற்பனைக்குண்டு சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி, லேன். கொக்குவில் [3499]

### திருமணஅழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும் திருமணக்காட்டுகள் சகலடிஸைன் களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய, ஸ்ரீகாந்த்- புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/5033)

### தேவை

நல்ல நிலையில் உள்ள Konica MR 70 எனும் கமரா உடன் தேவை. தொடர்பு: வி. இல. 133 C/o உதயன், யாழ்ப்பாணம். (13297)

### பெண் விற்பனையாளர் தேவை

பெண் விற்பனையாளர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும் மாநகரசபை எல்லைக்குள் உள்ளவர் விரும்பத்தக்கது யாழ்/நிறுவை அளவை நிலையம் 650, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [13172]

### மணமகன் தேவை

யாழ்: இந்து கோவிய குல, தனியார் நிறுவனமொன்றில் உதவிக் கணக்காளராகப் பணிபுரியும் 28 வயதுடைய மணமகளுக்கு பெற்றோர் அரசாங்க அல்லது தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் அதே குல மணமகனைத் தேடுகின்றனர். ஜாதகத்தில் கிரகபாவம் 36 தகுந்த சீதனம் வழங்கப்படும். இல. 706, C/o உதயன். [3724]

### தவறிவிட்டது

Temple Road இற்கும் Convent Road இற்கும் இடையில் 10-5-90 அன்று சிறிய அல்பம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (3723)

### வீடு வாடகைக்கு

சகல வசதி கொண்ட வீடு வளாகச் சுற்றாடலில் வாடகைக்கு விடப்படும். முழு விபரங்களையும் தெரிவிக்கவும். இல. 707, C/o உதயன். [3726]

### Spoken Advanced Toefl

மாசிமாதம் (Feb 90) ஆரம்பித்துப் பின் இடை நிறுத்தம் செய்யப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்க. நேரம் காலை 8 – 10 மணி வரை மாலை 4 – 6 மணி வரை S.B Iyar, 12(36), வைமன் வீதி, நல்லூர். (13163)

### Restaurant

யாழ் சைனீஸ் றெஸ்ற்ரோறன்ற், முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், அறைகளும் வாடகைக்கு உண்டு [ 3430 ]

### A/L மாணவர்களே!

ஏப்ரல் மாத பொருளியல் நோக்கு (அரசியல் மற்றும் பொருளாதாரம்) வர்த்தக உலகம் சஞ்சிகைகள் விற்பனையாகிறது. ஸ்ரீகாந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், No- 165, யாழ்ப்பாணம் சி/4587)

## இன்று கொடியேற்றம்

கரவெட்டி, மே 30

நவிண்டில் ஸ்ரீ குலனை வினாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 8ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (இ-70)

## மருதடிவிநாயகர் கொடியேற்றம்

சாவகச்சேரி மே 30

நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன் கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். ஜூன் மாதம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் தேர் தீர்த்த உற்சவங்கள் நடைபெறும்.

விழாக்காலங்களில் சமயச் சொற்பொழிவுகள் இடம் பெறும். (இ - 31)

## பணிப்பாளர் உத்தரவு

மட்டக்களப்பு, மே. 30

கல்வித் திணைக்களத்துக்கு புதன்கிழமைகளில் மட்டும் வருகைதந்து தமது அலுவல்களை முடித்துச் செல்லலாம் என மட்டக்களப்பு மாவட்டக் கல்விபணிப்பாளர் திரு. ஏ. சோமசுந்தரம்சகல ஆசிரியர்களுக்கும் அறிவித்துள்ளார். ஏனைய நாட்களில் அவசர அலுவலகங்களுக்காக ஆசிரியர்கள் சமூகமளிப்பதென்றால் அதிபர் சிபாரிசுடனும்; அதிபர்கள் கொத்தணி அதிபர்சிபார்சுடனும் மட்டும் சமூகளிக்கலாம். (இ-ரி)

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



வேலணை கிழக்கு

### செல்வி சரண்யா மாணிக்கவாசகர்

| | |
|---|---|
| மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி மலர்ந்தது: | மனம் பதறித்துடிக்க வாடி உதிர்ந்தது: |
| 26 - 09 - 1985 | 30 - 04 - 1990 |

எத்தனை யாண்டுகள் தவமிருந் தெம்மை
ஏங்கித் தவிக்க வைத்தாய் அதன் பின்
இத்தரை மீதினில் வந்து பிறந்தெம்
இதயங் குளிர வைத்தாய் மலடெனும்
முத்திரை அழித்தெம் முகத்திலில் அன்று நீ
முறுவல் தவழ விட்டாய் பிறகேன்
பித்தரைப் போலெமைப் புலம்பிட வைத்துப்
பிரிந்து நீ சென்று விட்டாய்

எமது செல்வியின் நல்லடக்கத்திலும் ஏனைய கிரிகைகளிலும் கலந்து கொண்டும், உதவிகள் புரிந்தும் எமது தாங்கொணாத் துயரில் பங்களிப்புச் செய்த அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

திரு வே. பொ. மாணிக்கவாசகர்,
(சச்சேரி மன்னார்)

திருமதி இ. மாணிக்கவாசகர்.
(தொலைத் தொடர்புகள் திணைக்களம் மன்னார்)

வேலணை - 2 [3669]


திருமலை வாழ் பட்டதாரிகளதும் அரச உத்தியோகத்தர்களதும் தேவை கருதி

## யாழ் நகர் அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
ஆரம்பிக்கும்

## S. L. A. S. போட்டிப்பரீட்சைக்கான விசேட பயிற்சி வகுப்புகள்

திருமலையில்- ஆரம்பம்: 07—06—90

பாடநெறி: கிரகித்தல், நுண்ணறிவு, விடய ஆய்வு, பொதுவினாத்தாள்

★ தொடர்ச்சியாக 10 தினங்கள் பி. ப. 3—7 மணி வரை
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 300/-
★ விடுமுறை தினங்களில் காலையும் – மாலையும்

விபரங்களுக்கு: மயூரன் புத்தகசாலை,
வித்தியாலயம் வீதி – திருகோணமலை.

# ASTAN INSTITUTE

166/1, Hospital Road, JAFFNA:



# தான்சன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட், தெல்லிப்பழை.

## O/L DAY CLASS
[பகல் நேர வகுப்புகள்]
காலை 8 மணி முதல்
பி. ப. 1மணி

ஆரம்பம்: 05-06-90

விஞ்ஞானம்: J. R. சூரி
கணிதம்: மகேந்திரன் - மதி

''ஏனைய சகல பாடங்களும் நடைபெறும்''

[சி-4545]


## தசாகாதி கிருகஞ்ஞயக்கிரிகை அழைப்பிதழும் நன்றி நவிலலும்



திருமதி
### பரமசாமிஐயர் ராஜராஜேஸ்வரி அம்மாள்
(ராஜம்)

| | |
|---|---|
| மண்ணில் | மனங்களில் |
| 02 – 06 – 1937 | 23 – 05 – 1990 |

23 – 05 – 1990 புதன்கிழமை இரவு தெய்வீக நிலையடைந்த பண்டாரவளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் முன்னாள் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ: இரட்ன ஐயர் அவர்களின் புதல்வியும், அனலைதீவு பிரம்மஸ்ரீ சி. நடராஜக் குருக்கள் அவர்களின் மருமகளும், எனது அன்பு மனைவியுமாகிய ராஜராஜேஸ்வரி அம்மாள் (ராஜம்) அவர்களின் சமக்கிரிகைகள் 25 - 05 – 1990 இல் பண்டாரவளையில் நடைபெற்றன.

துயர்மிகுந்த அவ்வேளையில் துணையாய் நின்ற அன்புள்ளங்கள் அனைவருக்கும் அனுதாபச்செய்திகள் ல் ஆறுதல் செய்தவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதோடு எதிர்வரும் 01 - 06 – 1990 வெள்ளிக்கிழமை முதல் 03 – 06 – 1990 ஞாயிற்றுக்கிழமை வரை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் தசாகாதி கிருகஞ்ஞய கிரிகைகளில் அல்லது அவரின் ஆன்மா வீடுபேற்று நிலையடையப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்போடு வேண்டுகின்றேன்.

பிரிவால்துயருறும்
பிரம்மஸ்ரீ ந. பரமசாமிஐயர்.

கிறேக் மேற்பிரிவு,
பண்டாரவளை,
30 - 05 - 1990 (13296)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திரு. இளையதம்பி குருநாதன்
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

| | |
|---|---|
| தோற்றம்: | மறைவு: |
| 28 – 02 – 1922 | 01 - 05 – 1990 |

எம்மில் அணையாத ஒளியாக
மிளிர்ந்து நிறைந்த
எம் இனிய தந்தையே?
நாட்கள் மாதங்களாகி,
மாதங்கள் ஆண்டுகளாகி,
ஆண்டுகள் யுகங்களானாலும்,

உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது. அன்னாரின் மரணச் சடங்குகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 31–05–90ல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டும்.

உங்கள் பிரிவை தாங்க முடியாத
அன்பு மனைவி, பாசம் மிகுந்த பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

37, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [13168]


# SRI MEENAKSHI COMMERCIAL COLLEGE

11 B, Momsac Building,
[Opp. Vivekananda Press]
Stanley Road, Jaffna.

## I. A. B: (Found, Inter Finals)
Weekdays: 04 - 06 - 1990
Weekends: 03 - 06 - 1990

## A. A. T: (SriLanka) STAGE I
03. 06. 1990

Lecturer: K.C. Satiyamoorthy

(சி-4614)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி இராசம்மா கனகசபை

| | |
|---|---|
| மலர்வு: | உதிர்வு: |
| 08 – 03 – 1914 | 30 – 04 – 1990 |

அன்பின் திருவுருவாய் பண்பின்
பிறப்பிடமாய் பாசத்தின் சிகரமாய்
சுயமரியாதைக் கொள்கையின்
சுடர் விளக்காய் வாழ்ந்து எங்கள்
அனைவருக்கும் வழிகாட்டியாய்
குடும்பத்தை வழிநடத்தி அரும்
பணியாற்றிய எங்கள் அன்புத்
தெய்வமே நீர் திடீரெனப் பிரிந்து
எம்மை ஆளாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட
உன் நினைவும் பாசமும் எம்மை
விட்டு அகலாது நிலைத்திருக்கும்!

உம் பிரிவால் வாடும்;
அன்புக் கணவர், மகன் [ஜேர்மன்],
மகள் - மருமகன், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

கொழும்பு ஸ்ருடியோ,
யாழ்ப்பாணம். (13299)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி பீதாம்பரம் நிர்மலா

| | |
|---|---|
| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| 30-07-1956 | 11-06-1989 |

திதி: 30.05.1990

அன்பின் தெய்வமே! எங்களை பிரிந்து ஓராண்டு சென்று விட்டது. ஆனால் ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் எங்கள் நெஞ்சில் உங்கள் நினைவுகள் மாறாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்,

கணவர், பிள்ளைகள், சகோதரங்கள்,
மாமிமார், மைத்துனர்கள், மச்சாள்மார்,
உற்றார், உறவினர்.

இராச வீதி,
கோப்பாய். (13300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

கவ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து.

**பொருள்:**

எம் காமம் ஊரார் சொல்லுகின்ற அலரால் வளர்வதாயிற்று; அந்த அலர் இல்லையானால் அது தன் தன்மை இழந்து சுருங்கிப் போய் விடும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

30 - 05 - 1990 த. பெ இலக்கம் 25

# மாகாணப் பொலீஸ் சேவை

நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்து, விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது, நீதி அமைச்சர் ஜனாப் ஹமீத் முக்கியமான விடயங்கள் சம்பந்தமாக உறுதிமொழிகளை வழங்கிச் சென்றுள்ளார்.

அவற்றோடு, விடுதலைப் புலிகள் கொடுத்த பெயர்ப் பட்டியலில் இருப்போரை மாகாணப் பொலீஸில் சேர்த்துக் கொள்ளவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பொலீஸார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதையே பிரதான பணிகளாகக் கொண்டவர்கள். ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் 1983 ஆம் ஆண்டின் பின்னர் அவர்களின் சேவை இல்லை.

தமிழ்ப் பகுதிகளில் முழுக்க முழுக்கச் சிங்களப் பொலீஸாரை வேலைக்கு அமர்த்தியதால் விளைந்த வினை அது அவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பணியில் ஈடுபடுவதற்குப் பதிலாக, அடாவடித்தனம் செய்தார்கள். தமிழ் மக்களை அடிமைகளாக நடத்த முற்பட்டதும் அல்லாமல், அவர்களையும் அவர்களின் உடைமைகளையும் அழித்தார்கள்; சொல்லொணாத அனர்த்தங்களைப் புரிந்தார்கள். சட்டங்களை அமுல் செய்வதற்குப் பதிலாக, அவற்றைத் தமது கைக்குள் எடுத்துக் கொண்டு, அவற்றுக்கு முரணாக அத்துமீறல் செய்து அநியாயம் புரிந்தார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற கேடயத்தைக் கொழுவிக் கொண்டு, தமிழ் மண்ணையும் மக்களையும் சீரழித்தார்கள். எத்தனையோ தமிழ் இளைஞர்களைக் கொன்று குவித்தார்கள். ஆயுதப் படைகள் தமிழ்ப் பகுதிகளில் நடத்திய வெறித்தனத்துக்கும், புரிந்த கொலைகளுக்கும் உதவினார்கள்; ஒத்தாசை புரிந்தார்கள்.

அதன் காரணமாகவே தமிழ்ப் பகுதிகளுக்கு பொலீஸார் தேவை இல்லை என்ற நிலைப்பாடு எழுந்தது. அவர்கள் இல்லாமல் இருந்தாலே தமிழ் மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு என்ற நிலை உருவானது.

அந்த நிலை தொடர்ந்ததால், தமிழ்ப் பகுதிகளில் சட்டமும் ஒழுங்கும் நீண்ட காலமாகச் சீர்குலைந்து போனது உண்மைதான்; அது துரதிர்ஷ்ட வசமானதே.

சிங்களப் பொலீஸாரின் சேவை தமிழ்ப் பகுதிகளுக்கு உகந்தது அல்ல; அது அமைதிக்கும் சமாதானத்துக்கும் பதில் குழப்பத்தையே தோற்றுவிக்க வல்லது என்பது இயல்பு நிலைமை வந்த பின்னரும் நிரூபிக்கப்பட்டு விட்டது. கடந்த மாதம் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, திருகோணமலை ஆகிய இடங்களில் நடந்த சம்பவங்களையே இங்கு குறிப்பிடுகிறோம். ஏன், இப்போதும் விட்டு விட்டு, தொட்டுத் தொட்டு, கிழக்கில் பொலீஸ் அத்துமீறல்கள் தலைகாட்டத் தொடங்கியுள்ளன.

இராணுவம் மற்றும் ஆயுதப்படைகள் மட்டுமன்றி பொலீஸும் தமிழர்களுக்குப் பாதகமானவை, பாதுகாப்பற்றவை என்ற நிலையைச் சிங்களப் பொலீசார்கள் உருவாக்கிவரும் பின்னணியில், சட்டம் ஒழுங்கு கெட்டாலும் பரவாயில்லை, அவர்களின் தொந்தரவும், உபத்திரவமும், நட்டாமுட்டித்தனமும் இல்லாமலிருந்தாலே போதுமானது என்ற எண்ணப்பாடே தமிழர்களிடம் குடிகொண்டிருக்கிறது.

எனினும், எதற்கும் சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கு சட்டபூர்வமான, சட்டத்திற்குப் பதில் சொல்லக்கூடிய ஓர் அமைப்புத் தேவை என்பதை ஒதுக்கிவிடமுடியாது. மக்களிடையே பாகுபாடு காட்டாமல் ஒழுங்கையும், சமநீதியையும், நியாயத்தையும் நிலைநாட்ட சுயேச்சையான, அதே வேளை பலமான அமைப்பு ஒன்று தமிழ்ப் பகுதிகளுக்குத் தேவை.

அந்தத் தேவையை, தமிழர்களைக் கொண்ட மாகாணப் பொலீஸ்படை ஓரளவு பூர்த்தி செய்யும் என நம்பலாம். மாகாணப் பொலீஸ் படை வடககு - கிழக்கில் தாமதமின்றிச் செயற்பட வேண்டுமெனில் ஏற்கனவே பயிற்சி பெற்ற தமிழ் இளைஞர்களை அதில் இணைத்துக் கொள்வது உசிதமானது.

தமிழ்ப் பிரதேசங்களில் சட்ட ஒழுங்கு சரிவர பேணப்பட வேண்டுமெனில், போராளிகளுக்கும் பொலீஸாருக் இடையில் நல்லுறவு ஏற்பட வேண்டுமெனில், தமிழர்களைக் கொண்ட மாகாணப் பொலீஸ் படை நிதர்சனமாக வேண்டும்.

## மாவை ஆலய உற்சவம்; ஏற்பாடுகள் குறித்து கூட்டம்

காங்கேசன்துறை மே 30

''பொதுமக்கள் ஆலயத்தை புனித இடமாக மதித்து ஆசாரசீலர்களாக வந்து உற்சவத்தை அமைதியாகவும், சிறப்பாகவும் நடத்த ஒத்துழைப்பு நல்க வேண்டும்''.

மாவை ஆலய உற்சவ ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக கூட்டப்பட்ட கூட்டத்தில் உரையாற்றிய வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா மேற்கண்டவாறு கூறினார்.

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மாவை ஆலய ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள், கீரிமலை நகுலேஸ்வரா ஆலய ஆதீன கர்த்தா பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் உட்பட கிராம சேவையாளர்கள், அரச அதிகாரிகள், பொது நல நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். பக்தி சிரத்தையுடன் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமானது.

உதவி அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில் கூறியதாவது :-

கடந்த காலங்களைப் போல இம்முறையும் உற்சவ ஒழுங்குகளை சிறப்பாக மேற்கொள்ள சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். திருட்டுகள், விரும்பத்தகாத சம்பவங்கள் இடம் பெற

[5ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில் பொலீஸாருக்கு 1,200பேர் தெரிவு

மட்டக்களப்பு, மே 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற பொலீஸ் நேர் முகப் பரீட்சையிலிருந்து சுமார் ஆயிரத்து 200 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

அடுத்த மாதம் அளவில் இவர்களுக்கான பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது தெரிவானோர் தொடர்பான பொலிஸ் அறிக்கை தற்போது கோரப்பட்டுள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ரி)

## காகித ஆலை ஊழியர் அவதி

மட்டக்களப்பு மே 30

வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்களுக்கு சீரான ரயில் பஸ் போக்குவரத்துச் சேவை இல்லாததால் அவர்கள் உரிய நேரத்தில் கடமைக்கு வர முடியாத நிலை இருந்து வருகிறது.

இது தொடர்பாக காகித ஆலை பிரயாணிகள் சங்கம்! போக்குவரத்து அமைச்சர், ரயில்வே பொது முகாமையாளர், கி. பி. போ. ச தலைவர் உட்பட சம்பந்தப்பட்டவர்களுக்கு அவசரத் தந்திகளை அனுப்பி வைத்துள்ளது. (ப-ரி)

# வவுனியாப் பாடசாலைகளுக்கு 63 லட்சம்ரூபா ஜெர்மன் உதவி

வவுனியா மே 30

வவுனியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் மலசலகூட, குடிதண்ணீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென ஜெர்மன் குடியரசிடமிருந்து 63 லட்சம்ரூபா நிதியுதவி கிடைக்கவுள்ளது.

கல்வித் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளையில் முன்னுரிமை அடிப்படையில் கொத்தணி அதிபர்களின் சிபார்சின் மூலம் தெரிவு செய்யப்படும் 15 பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்குரிய நிதியை வழங்குவதற்கு வடக்கு-கிழக்கு மாகாணசபை இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இந்த இரு திட்டங்களும் செயற்படுத்தப்படுமானால் இம்மாவட்டப் பாடசாலைகளிடையே நிலவும் அதிமுக்கிய தேவையான குடி தண்ணீர் மலசலகூடத் தேவைகள் பூர்த்தி ஆகும் என்று அந்த அதிகாரி நம்பிக்கை தெரிவித்தார்; (இ-164)

## பளையில் சாரண ஆசிரியர் நற்குணம் நினைவு தினம்

யாழ்ப்பாணம் மே 30

சமாதான செய்திகளுடன் கொழும்பு நோக்கிச் செல்லும் போது விபத்துக்குள்ளாகி அகால மரணமடைந்த ஜனாதிபதி விருது பெற்ற சாரணர் ஆசிரியர் என். நற்குணத்தின் 45 ஆம் நாள் நினைவு தினம் பளை மகா வித்தியாலய சாரணர் குழுவினால் கடந்த சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

கொத்தணி அதிபர் திரு. ஏ. பீ. செல்லையா தலைமையில் நடந்த இவ் நிகழ்ச்சியில் திரு நற்குணத்தின் நினைவு மலரும் வெளியிடப்பட்டது.

திரு ஏ. பி. செல்லையா, திருமதி சா. அருந்தவபாலன், செல்வி. சே பவானி, திருமதி சௌ. தர்மலிங்கம், திரு. கே. விக்னேஸ்வரன், செல்வன் கு. குணரூபன், செல்வி. த. ரேவதி, மருத்துவபீடமாணவன், செல்வன். சி. சிவஞானம் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். (இ - 7)

## எதிர்வரும் 5 ஆம் திகதி: உலக சுற்றாடல் தினம் வட-கிழக்கிலும் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மே. 30

எதிர்வரும் 5 ஆம் திகதி உலக சுற்றாடல் தினமாகும்.

உலக சுற்றாடல் தினம் வடக்கு- கிழக்கிலும் அனுஷ்டிக்கப்பட இருக்கிறது.

அதை முன்னிட்டு இன்று தொடக்கம் 5 ஆம் திகதிவரை உள்ளூராட்சி மன்றங்கள் தத்தமது பிரதேச சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமென வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சி. சடாச்சர சண்முகதாஸ் சகல உள்ளூராட்சி மன்றங்களையும் கேட்டுள்ளார்.

உலக சுற்றாடல் தினத்தன்று தேசிய மரம் நாட்டும் இயக்கத்தையும் ஆரம்பித்து வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-117)

## சுண்டிக்குளம் வரைக்கும் 6 மைல் நீள புதிய வீதி

யாழ்ப்பாணம் மே 30

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து சுண்டிக்குளம் வரையிலான பிரதேசத்தை இணைக்கும் ஆறு மைல் நீளமான வீதியொன்றை அமைக்கும் பணியை யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் மேற் கொண்டுள்ளனர். இவர்களுடன் இணைந்து வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களும், அப்பிரதேசத்தில் வாடியமைத்து கடற்றொழில் புரிவோரும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் வீதி அமைப்பு வேலையை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தையா) நேரில் சென்று பார்வையிட்டு வேலைத் திட்டத்தை மேற் கொண்டுள்ளவர்களுடன் கலந்துரையாடினார்.

நீண்ட காலமாக மேற்படி பகுதிகளை இணைக்கும் வீதி இன்மையால் அப்பகுதி வாழ் மக்கள் அந்த 6 மைல் தூரத்தையும் கால் நடையாகவே கடக்க வேண்டியிருந்தது. அத்துடன் இப்பகுதிகளில் கடற்றொழில் புரிவோர் உடனுக்குடன் தமது பொருள்களை சந்தைப் படுத்த முடியாமலிருந்தது. இப்புதிய வீதியால் இந்தப் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். (இ-7)

## வடமராட்சி கிழக்கு பி. சபை மீண்டும் பருத்தித்துறையின் கீழ்!

தாளையடி,மே 30

வடமராட்சி கிழக்கு மீண்டும் பருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தொடக்கம் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பகுதி, தனியான பிரதேச சபையாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இயங்கிவந்தது.

தற்போது உள்ளூராட்சி அமைச்சு, வடமராட்சி கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகம் பருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது,

வடமராட்சி கிழக்கு பிரதேச சபை உருவாக்கப்பட்டதற்கு மாகாண சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தபோதிலும், உள்ளூராட்சி அமைச்சு வர்த்தமானியில் இப்புதிய பிரதேச சபை பற்றி பிரகடனம் எதனையும் வெளிடாததினாலேயே வடமராட்சி கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகம் மீண்டும் பருத்தித்துறை பிரதேசசபையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகச் சொல்லப் படுகிறது. (அ-144)

## ஹோமியோபதி கருத்தரங்கு

யாழ்ப்பாணம் மே 30

வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் 42 ஆவது கருத்தரங்கு எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நாவலர் வீதி, ஐந்து சந்தியிலுள்ள மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இதில் வயிற்றுப்புண்ணுக்கு ஆயுர்வேத, ஹோமியோபதி, அக்குபஞ்சர் சிகிச்சை முறை பற்றி டாக்டர் எஸ். ரி. புவிராசன் உரை நிகழ்த்துவார். (இ-7)

## பாடசாலைக்கு புதிய கட்டடம்

கோப்பாய் மே 30

நீர்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு எட்டு லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் குழாய் கிணறு என்பன அமைக்கப்பட்டு வருகின்றன. (இ-72)

## ஒன்றரை மாதம் சென்றும் 'பாஸ்போட்'வந்துசேரவில்லை

ஒன்றரை மாதங்களுக்கு முன் வவுனியாக் கச்சேரியிலிருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களுக்கான பாஸ்போட்டுகள் இன்னும் அனுப்பியவர்களுக்கு அனுப்பப்படவில்லை.

இரண்டு கிழமைகளில் பாஸ்போட் கொடுக்கப்படுவதாக பாஸ்போட் அலுவலகம் அறிவித்ததைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கானோர் தமது விண்ணப்பங்களை வவுனியாக் கச்சேரியூடாக அனுப்பியிருந்தனர். (இ-30)

## வவுனியா ஆஸ்பத்திரிக்கு மன்னாரிலிருந்து சமையற்காரர்

வவுனியா மே 30

வவுனியா அரசினர் ஆஸ்பத்திரியில் நிலவும் சமையற்காரர் இல்லாத பிரச்சனையை நீக்குவதற்காக மன்னார் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய ஒருவர் இங்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த வைத்தியசாலையில் மூன்று சமையற்காரர்கள் பணிபுரிய வேண்டிய இடத்தில் ஒருவரும் இல்லாத நிலை கடந்த சில மாதங்களாக வேறு சிற்றூழியர்களே சமையல் வேலையையும் கவனித்து வந்தனர்.

இதனிடையில் வைத்தியசாலையின் ஆய்வு கூடத்துக்கு மன்னாரிலிருந்து ஒரு தொழில் நுட்ப உதவியாளரையும், — பேசாலையில் கடமைபுரியும் பல்வைத்தியரை நிரந்தரமாக வவுனியாவில் நியமிக்கவும் — நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

இக்குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியதைத் தொடர்தே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஆஸ்பத்திரி நலன்புரி குழுவின் செயலாளர் திரு. ரீ. கே. ராஜலிங்கம் தெரிவித்தார். (இ-164)

# புரதச்சத்தை இழப்பதற்கான காரணிகள் குறித்து ஆராய்வு

### பேராசிரியர் றிஸ்வி ஷெரீவ் விளக்கினார்

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் மருத்துவ சுகாதார நடவடிக்கைகள் குறித்து, பத்திரிகைகள் மூலமாகவே தெரிந்து கொள்ள முடிந்தது. இன்று உங்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தின் 8 ஆவது வருடாந்த விஞ்ஞானக் கூட்டத்தின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த சனியன்று நடைபெற்றன. அன்றைய நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியரும், சிறுநீரக சிறப்பு நிபுணருமான ஜனாப் றிஸ்வி ஷெரீவ் மேற்கண்டவாறு பேசினார்.

மனித உடலிலிருந்து புரதச் சத்து சிறுநீருடன் (PROTEIN URINE) இழக்கப் படுவதற்குக் [illegible] சிறுநீரக நோய்க்கான காரணிகள் (NEPHROTIC SYNDROM) குறித்து தான் இதுவரைமேற்கொண்ட ஆய்வுகளையும் தாம் எடுத்துள்ள முடிவுகளையும் அங்கு கூடியிருந்த வைத்திய மாணவர்களுக்கு பேராசிரியர் ஷெரீவ் விளக்கினார்.

இத்துறையிலானதமது ஆய்வுகளும் முடிவுகளும் பெரும்பாலும் இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், ஜோன் றட்கிளிவ் வைத்திய சாலை ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொண்ட போது எடுக்கப்பட்டனவை என்றும் —

பாரம்பரிய உத்தேசக் காரணிகள் என்ற அடிப்படையில் தான் ஆய்வுகளை மேற்கொண்டதாகவும் - அவர் கூறினார்.

இத்துறையில் மென்மேலும் ஆராய்ச்சிகள் செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

உடனடியாக இறப்பை ஏற்படுத்தாத [illegible] குறித்து யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ நாகேஸ்வரன் மாணவர்களுக்கு தனது ஆய்வினை விளக்கினார். யாழ். ஆஸ்பத்திரியில் இதுவரை அனுமதிக்கப்பட்ட இருதய நோயாளர்களிடமிருந்து பெற்ற தரவுகளின் படி டாக்டர் நாகேஸ்வரன் தனது ஆய்வை மேற்கொண்டிருந்தார்.

கூட்டத்தில் பல மாணவர்கள் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்து விளக்கவுரையாற்றினர், அவர்களில் செல்வி ஜசிந்தா கந்தசாமி, செல்வி ஷெரீன் சுபோதினி சடாநாதன் ஆகிய இருவரும் சமர்ப்பித்த ஆய்வு சுதேச வைத்திப்பிரியர்களைக் கவருவதாக அமைந்தது. சில மேனாட்டு மருந்துகளுக்கு நிகராக பற்றீய எதிர்ப்பியல்புகளைக் கொண்ட இயற்கைத் தாவரமூலிகைகள்என்ற பொருளில் அமைந்த இவர்களது ஆய்வுக் கட்டுரை பல [illegible] கவனத்தையும் ஈர்த்தது

## வாசகர் திருமுகம்

### தமிழரும் இருப்பதை மறப்பதா?

மொழி அமுலாக்கம் பற்றி அரசியல் தலைவர்கள் மேடைகள் தோறும் பேசுவதையும் அறிக்கைகள் விடுவதையும் அன்றாடம் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

ஸ்ரீலங்கா அரசினர் கைத்தொழில் நிர்வாகத்தை ஒரு தமிழரான திரு. தொண்டமான் பொறுப்பேற்றுள்ளார். இவரின் நிர்வாக அமைப்பின் கீழ் இயங்கும் கைத்தொழில் அபிவிருத்திசபை கைத்தொழிளார்களின் நன்மை கருதி நூற்றுக்கணக்கான தொழிற் திட்டங்களை நூல் வடிவில் வெளியிட்டுள்ளது.

இந்த வெளியீடுகள் தனியே சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மாத்திரமே உள்ளன. இந்நிலையில் கைத்தொழில் ஆரம்பிக்க விரும்புவோரும், கைத்தொழிலாளர்களும் தமிழர்களாக இருப்பதை அமைச்சரின் நிர்வாகம் விரும்பவில்லையா?

சம உரிமை பெற்ற தமிழ் மொழியிலும் இந்நூல்களை வெளியிட்டால், அரசின்கைத்தொழில் திட்டங்களில் தமிழ் மக்களும் பயன் பெறுவார்கள் அல்லவா

அ. யேசுதாசன்
யாழ்ப்பாணம்.

### சூரிய ஒளியை நம்பி நூலகம்

திருமலை பொது நூலகம் தற்போது சூரிய ஒளியை நம்பி இயங்கி வருகின்றது. நெல்சன் படமாளிகையில் இயங்கிவரும் இந்த நூலகத்தின் மின்சார இணைப்புகளைத் திருத்தினாலன்றி மின்சாரம் வழங்க முடியாது என மின்சாரப் பகுதி கைவிரித்து விட்டதாலேயே இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் ஜன்னல் வசதிகளற்ற தகரக் கொட்டகையான இந் நூல்நிலையத்தை பயன்படுத்தும் வாசகர்கள் பெரிதும் கஷ்டமடைகின்றனர். நூலக நேரமும் வெளிச்சத்துக்கேற்றவாறு முடிவடைவதால் வேலைக்குச் செல்லும் அரச ஊழியர்கள் வாசிக்கும் வசதியை இழந்துள்ளனர்.

நூலகக் குழுவும், வாசகர் வட்டமும் இந்த விடயத்தில் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென நூலக வாசகர்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

க. தம்பித்துரை,
திருகோணமலை.

### தட்டுப்பாடு

கோப்பாய், மே 30

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் நீரிழிவு நோய் பரிசோதனைத் திரவமான பெனடிக்கரைசலுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. (இ-72)

## கண்டதும் கேட்டதும்

வழமையாக விலை உயர்வு பற்றிய அறிவிப்பு அது அமுலுக்கு வரும் நாளே வெளிவருவது வழக்கம் பதுக்கல், தட்டுப்பாடு இவற்றில் இருந்து பொது மக்களைப் பாதுகாப்பதே அதன் நோக்கம்.

சமீபத்தில் கோதுமை மா, பாண் ஆகியவற்றின் விலை உயர்வு பற்றிப அறிவிப்பு வெளிவந்தது. ஆனால் வழக்கம் போல் அல்லாமல் இரு தினங்களுக்கு முன்பே பத்திரிகைகள் மூலம் இது பற்றி அறிவிக்கப் பட்டிருந்தது.

இதன் தாக்கம் ......... அந்த இரு தினங்களும் கோதுமை மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது.

விலை உயர்வு அறிவிப்பில் கையாளப்பட்ட நடைமுறை வழக்கத்துக்கு மாறாக இம்முறை வர்த்தகர்களையே பாதுகாத்திருக்கிறது. பொதுமக்களை அல்ல.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பின் விளைவு தெரியாமல் நடந்து கொண்டார்களா அல்லது உள்நோக்கத்துடன்தான் நடந்து கொண்டார்களா என்று ஸ்ரீமான் பொதுசனம் செய்திலோலனை துளைத்தார்!

செய்திலோலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க அறிவித்தல்

**சுகாதார சேவைகள் பிராந்தியத் திணைக்களம் - யாழ்ப்பாணம்.**

இப்பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளின் பாவனைக்கு அவசியமான தளபாடங்கள் (மரம், உருக்கு) கொள்வனவிற்கான விலைகள் கோரப்படுகின்றன.

தளபாடங்களை வழங்க விரும்புவோர் மேலதிக விபரங்களை இக்காரியாலயத்தில் பெற்று 06-06-90 புதன் கிழமை பகல் 12.00 மணிக்கு முன் இக்காரியாலயத்தில் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும்.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

வைத்திய கலாநிதி
ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

[சி-4583]

## 14ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி ரூபராணி செல்வரத்தினம் [ரூபி]**

அன்னையின் மடியில்: 18-5-1958
ஆண்டவன் அடியில்: 30-5-1976

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்த நீங்கள், 14 ஆண்டுகள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும், தங்கள் திருஉருவமும், நினைவும் எமது உள்ளத்தில் எப்பொழுதும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளன.

தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
அன்புக் குடும்பத்தினர்.

''செல்வகிரி''
உடுப்பிட்டி.

(3662)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**வேலாயுதம் வன்னியசிங்கம்**

மலர்வு: 22 - 03 - 1961
உதிர்வு: 30 - 05 - 1988
திதி: 07 — 06 — 1990

ஆண்டு இரண்டு சென்றாலும்
ஆறுமோ எங்கள் உள்ளம்
உன் நினைவென்றும் அகன்றதில்லை
நிகழ்வுகளின் நினைவுகளில் நிதமும் உன் நினைவு
நித்தமெமை உருக்கும் நீங்காதுன் சிந்தனைகள்
நீ எம்முடன் வாழ்ந்த
அந்தப் பசுமையான நாட்களே
நீங்காமல் பரிதவிக்கும் எங்களுக்கு இதமளிக்கும்

பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், அண்ணன்மார்,
அக்கா, தம்பிமார், தங்கைமார்,
உற்றார், உறவினர்கள்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

[3637]

★ கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட

# கம்யூ. வீழ்ச்சியின் பின்னர் நடக்கும் புஷ் - 'கோர்பி' உச்சி மாநாடு!

## இன்று வாஷிங்டனில் ஆரம்பம்

வாஷிங்டன், மே 30

சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் இன்று 30 ஆம் திகதி உச்சி மாநாடு நடத்தவிருக்கின்றனர்.

கிழக்கில் ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிசம் வீழ்ச்சியடைந்த பின்னர் இரு தலைவர்களும் முதன் முறையாக சந்திக்கப் போவது உலக அரசியலில் முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

கிழக்கு ஐரோப்பிய அரசியல் மாற்றங்களால் சோவியத் யூனியன் தலைமையிலான வார்ஸோ நாடுகளின் இராணுவக் கூட்டணி செயலிழந்து விட்டது; அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகளின் இராணுவக் கூட்டணி பலம் பொருந்தியதாக மாறியுள்ளது.

இந்த நிலையில் புஷ்- கோர்பச்சேவ் சந்திப்பு உலக அரசியலில் என்ன மாற்றங்களை இந்த நூற்றாண்டு முடிவிற்குள் ஏற்படுத்தப் போகிறது என்பதை பெரும்பாலும் கோடி காட்டும் என்று சொல்லப்படுகிறது.

இன்று 30ஆம் திகதி வாஷிங்டனை தனது மனைவி ரெய்ஸாவுடன் கோர்பச்சேவ் சென்றடைகிறார்.

இம் மாதம் 31, ஜூன் 1 ஆகிய திகதிகளில் வாஷிங்டனில் இரு தலைவர்களும் பேச்சு நடத்துவர்.

ஜூன் 2 இல் காம்ப்டேவிட்டில் இறுதிக் கட்டப் பேச்சுக்களை நடத்துவர்.

ஜூன் 3 இல் கூட்டாக வெள்ளை மாளிகையில் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொள்வர்.

முன்னாள் அமெரிக்க அதிபர் றொனால்ட் றேகனைச் சந்திக்க கோர்பச்சேவ் விருப்பம் தெரிவித்துள்ளதால், அவரது அமெரிக்க விஜயம் மேலும் ஒரு தினத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

திரு. றேகனை சான்பிரான்ஸிஸ்கோவில் வைத்து திரு. கோர்பச்சேவ் சந்திப்பார். (எ)

## தெற்கு லண்டன் நகரில் உள்ள இராணுவம் உஷார் நிலையில்!

லண்டன், மே 29

தெற்கு லண்டனில் உள்ள சகல இராணுவ முகாம்களும் உஷார் நிலையில் இருக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

கார் ஒன்றில் இருந்து இரண்டு துப்பாக்கிகளும் ஏனைய ஆயுதங்களும் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த உஷார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பொலீஸார் கார் ஒன்றை மறித்துச் சோதனையிட்ட போது காரின் சாரதியும் இன்னொரு நபரும் தப்பியோட முயற்சித்தனர்.

சாரதியை பொலீஸார் பிடித்துக் கொண்டனர். மற்ற நபர் தப்பி விட்டார்.

தெற்கு லண்டனில் ஐரிஷ் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தது விசாரணையில் தெரிய வந்தது.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள் ஏகே 47 கலாஷினோம் ரகத்தைச்சேர்ந்தவையாகும்.

### தமிழ்நாடு மேல் சபை

புதுடில்லி, மே 29

தமிழ்நாட்டில்மேல் சபையை மீண்டும் அமைக்க வழி செய்யும் சட்டத்திருத்தம் புதுடில்லி ராஜ்ஜ சபையில் நிறைவேற்றப்பட்டு விட்டது. (எ)

### ஜனாதிபதி கண்டனம்

பக்தாத் மே 29

இஸ்ரவேலுக்கு அமரிக்கா தொடர்ந்து ஆதரவு கொடுத்து வருவதை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹீசேன் நேற்று வன்மையாகக் கண்டித்தார்

அரபு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சிமாநாடு ஒன்று நேற்று பக்தாத் நகரில் ஆரம்பமானது

மாநாட்டைத் தொடக்கி வைத்துப பேசுகையில் ஜனாதிபதி மேலும் சொன்னதாவது;

இஸ்ரவேல் பலஸ்தீனியரின் மண்ணை அப்பட்டமாக ஆக்கிரமித்துள்ளது

இருக்கும் பலஸதீனியரையும் வெளியேற்ற சோவியத் யூனியனில் இருந்து யுதர்களை தருவித்துக், குடியேற்றம் நடத்துகின்றது

இந்தச் செயலில்ஈடுபடும் இஸ்ரவேலுக்கு அமெரிக்கா தொடர்ந்துஉதவுவது. மத்தியகிழக்கு பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றைக் காண உதவாதுஎன்று ஜனாதிபதிசதாம்ஹீசேன் சொன்னார். (எ)

### ராஜீவ்காந்தி சென்னை விஜயம்

சென்னை, மே 29

இந்திரா காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தி எதிர்வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி சென்னைக்கு விஜயம் செய்கிறார்.

காஞ்சிபுரம் செல்லும் வழியில் சென்னை நகருக்கும் வருவதாக ராஜீவ் காந்தி தன்னைப் புதுடில்லியில் சந்தித்த தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் எம்பிக்களிடம் தனது சென்னை விஜயம் பற்றித் தெரிவித்தார். (எ)

★ பிஜித்தீவு

## கரும்பு அறுவடை பகிஷ்கரிப்பு; இந்திய பிரசைகள் எச்சரிக்கை!

சுவா மே 29

பிஜியில் கரும்பு அறுவடையை இந்திய தொழிலாளர்கள் பகிஷ்கரிப்பின் இராணுவத்தினர் அதில் ஈடுபடுவர் என்று இராணுவத் தளபதி சித்திவேனிரபுக்கா சொன்னார்.

இந்தியத் தூதரகத்தை பிஜி அரசு மூடியதைத்தொடர்ந்து அங்கு இந்தியத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு கட்டமாக கரும்பு அறுவடையைப் பகிஷ்கரிக்கப் போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

பிஜியின் பிரதான தொழில் கரும்பு உற்பத்தி என்பது குறிப்பிடத்தக்கது.

★ ஹரியானா சட்டசபை

## தர்பகலன் இடைத் தேர்தலில் சௌதாலா வெற்றி!

சண்டிகார், மே 29

ஹரியானா மாநிலத்தில் சட்டசபைக்கு நடந்த தர்பகலன் தொகுதி இடைத்தேர்தலில் முன்னாள் முதலமைச்சர் ஓம்பிரகாஷ் சௌதாலா ஐம்பதாயிரத்துக்கு அதிகமான வாக்குகளால் வெற்றி பெற்றார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் உட்பட அனைத்து வேட்பாளர்களும் தங்கள் கட்டுப் பணத்தை இழந்தனர்.

ஹரியானாவில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக திரு சௌதாலா தனது முதலமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்திருந்தார்.

துணைப்பிரதமர் தேவிலாலின் புதல்வர் சௌதாலா ஆவார். (எ)

## பர்மா பொதுத் தேர்தலில் ஜனநாயக அணி முன்னணியில்

பர்மாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியான ஜனநாயக அணிக்கு வெற்றி வாய்ப்புக் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

495 ஆசனங்கள் உள்ள நாடாளுமன்றத்தில் முதலில் வெளி வந்த தேர்தல் முடிவுகள் அனைத்தும் ஜனநாயக அணிக்குச் சாதகமாகவே சென்றன.

இந்த அணியின் தலைவர் சிறையில் இருந்தபடியே தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டினார். (எ)


குமுலுஸ் D.F. போட்டி


**BASF**
**குமுலுஸ் D.F.**

**பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்**

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் ''குமுலுஸ் DF போட்டி'' என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.




வெட்டி அனுப்பவேண்டிய பகுதி




FINCHEM AGRO DIVISION
பின்லே கெமிக்கல்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186, வக்சோல் வீதி, கொழும்பு 2.

பெயர் ____
முகவரி ____
வியாபாரியின் பெயர் ____
முகவரி ____

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாக பாவிக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பிறந்த நாள் வாழ்த்து ★

செல்வப்புதல்வி துசாந்தி

மல்லாகம் மில்லேனைச் சேர்ந்த கணேசமூர்த்தி ஜெயலக்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வி துசாந்தி இன்று (30 - 05 - 90) தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மாமார், அக்காமார், அண்ணைமார், மச்சான், மச்சாள்மார், சித்தப்பா, மாமன்மார், மாமிமார் இவரை காளிகாதேவியின் அருள் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

[13303]

Air Conditi>n & Refrigeration

குளிரூட்டலும் பாதுகாத்தலும்

புதிய பிரிவு ஆரம்பம்:
02- 06- 1990

★ செய்முறை பயிற்சியுடன் கூடியது
★ துரித பயிற்சி நெறி

விபரங்கட்கு!

North Ceylon Technical Institute
14, St. Peter's Lane,
Hospital Road,
Jaffna.

(சி/4549)

LONDON EXAMS

NOV / DEC 90

| | Commencement |
|---|---|
| C. I. M. A (Stage 1) | 02 – 06 – 90 |
| I. D. P. M. (Part 1) | 02 – 06 – 90 |
| A. A. T. (Stage 1) (Sri-Lanka) | 02 – 06 – 90 |
| I. A. B. (Foundation) | 02 – 06 – 90 |
| (Intermediate) | 09 – 06 – 90 |
| (Final) | 16 – 06 – 90 |
| Computer – Basic | 07 – 06 – 90 |

LOTUS 1, 2, 3 dBASE III + WORD Processing, Short - Hand & Typing நடைபெறுகின்றன

FOR DETAILS


SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(C. I. M. A யினால் அங்கீகரிக்கப்பட்டது)

16, 3RD CROSS STREET
JAFFNA.

(சி4548)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்



அமரர் செபமாலை ஜெயசீலன்
(யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்)

பிறப்பு: 1940 — 01 — 15
இறப்பு: 1990 — 04 — 30

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் நல்வழி காட்டிய தலைவனே! எம்மைத் துயரக்கடலில் தவிக்க விட்டு இறைவனடி சென்றடைந்தீரோ! உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், சகோதரிகள், மச்சான்மார்.

S. ஜெயசீலன்,
68/1, இராசாவின் தோட்டம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[13304]

## மகளிர் முன்னணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளின் தாயகப் பூமியின் பூகோள தனித்தன்மையும் ஒருமைப்பாடும் பேணப்படல் வேண்டும்.

★ தமிழீழ பெண்களுக்கு எதிரான சகல ஒடுக்குமுறை வடிவங்களும் நீக்கப்படல் வேண்டும்.

★ தொழிற்துறையிலும், கல்வித்துறையிலும் பெண்களுக்கு எதிரான பாரபட்சம் சமத்துவமின்மை ஆகியவை நீக்கப்படல் வேண்டும்.

★ சீதனம் வாங்கும்முறை ஒழிக்கப்பட வேண்டும்,

★ பொருளாதார தங்கு நிலையிலிருந்து பெண்கள் விடுதலை பெற வேண்டும்.

★ தமிழீழ தாயகத்தில் சிங்கள குடியேற்றம் உடனடியாக நிறுத்தபபடல் வேண்டும்.

★ ஒரு லட்சம் மலையகம் வாழ் தமிழ் மக்கள் நாடு கடத்தப்படும் திட்டம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அவர்களும் ஏனைய மலையக மக்களும் இத்தீவின் குடிமக்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

★ மாகாணசபை உடனடியாகக் கலைக்கப்பட்டு ஆறாவது திருத்தச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்

### வேலைத் திட்டங்கள்

மகளிர் முன்னணியினால் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டன அவை வருமாறு:-

★ மகளிர் அமைப்புக்கான கட்டமைப்புகளை உடனடியாக உருவாக்குதல்

★ பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.

★ ஆரம்ப சுகாதார நிலையங்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் நூல் நிலையங்கள், சிறுவர் பாடசாலைகள் அமைத்தல்.

★ பால் வேறுபாடு ரீதியில் தொழில் துறையில் பெண்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதை நீக்கும் முகமாக அதற்கு அடிப்படையிலான இயந்திரவியல், தொழில் நுட்பஇயல்சார்ந்த அறிவினை பெண்கள் பெறுவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.

★ கலாசார ரீதியாக, சட்ட ரீதியாக பெண்களுக்கு எதிராகக் காணப்படுகின்ற ஒடுக்குமுறை வடிவங்கள் பற்றிய முழுமையான ஆய்வினை மேற்கொள்வதின் ஊடாக தீர்வுக்கான வழிவகைகளை ஆராய்தல். (ஒ-உ)

## இலங்கையின்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெவில்ஜெயவீரா அண்மையில் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவி, பாதுகாப்பு அதிகாரிகள், அரசு உயர் அதிகாரிகள், வெளிநாட்டுத்தூதர்கள் ஆகியோரைச் சந்தித்து தயாரித்த அறிக்கையும் இந்த மாநாட்டில் பரிசீலனை செய்யப்படும்.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் உள்ள நோபல் நிறுவனத்தில் நடைபெற உள்ள இம்மாநாட்டை இன மோதல் ஆராய்ச்சித் திட்டத் தலைவர் என்ற முறையில் திரு குமார் ரூபசிங்கா ஒழுங்கு செய்திருக்கிறார்.

இலங்கை அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரும் இம்மாநாட்டில் கலந்து கொள்வார் என்று கூறப்படுகிறது (அ-எ)

## 25 அகதிகள்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டனர்.

இரண்டு இந்தியர்கள் உட்பட நான்கு பேரையும் 11 பம்பாய் வெங்காயப் பொதிகளையும் சுங்கப் பகுதியினர் காங்கேசன்துறை பொலீசாரிடம் ஒப்படைத்தனர்.

இரண்டு பேர் பொலீசாரினால் விசாரணைக்கு உட்படுத்தபட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தியர்களான இராமநாதபுரத்தை சேர்ந்த செபமாலை பெர்ணாண்டோ சகாயராசா (வயது 27) அன்ரனி சேவியர் (வயது 27) ஆகியோர் தொடர்ந்து காங்கேசன்துறை பொலீசில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் படகில் வந்த இலங்கையர்கள் மண்டபம் முகாமில் தங்கியிருந்த அகதிகள் என்றும் இவர்களது படகு சேதமடைந்து நீரினுள் மூழ்கியதால் மற்றொரு படகில் ஏறி வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## மாவை -----

(3ம் பக்க தொடர்ச்சி)

இடமளிக்கக் கூடாது. அடியார்கள் நகைகள் அணிந்து வருவதை கூடியளவு தவிர்த்தால் திருட்டுக்களை தடுக்க முடியும்'' என்றார்.

வழமை போல் சுகாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்து ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்வதென கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. (இ-68)

## மைசூர் பருப்பு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மைசூர் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திற்கு நேற்றுவிதித்தார்.

இதனிடையில 6 ஆயிரத்து 200 மெட்ரிக் தொன் மைசூர் பருப்பை இறக்குமதி செய்வதற்கான கொள்வனவுக் கட்டளையைக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் அனுப்பியுள்ளது. (ஒ-எ)

## ஆசிரிய---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று உதயனுக்கு இத்தகவலைத் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் 55 வயதிலோ, 60 வயதிலோ ஓய்வு பெறும் போதிலும் தமது ஓய்வூதியத்தைப்பெற வருடக் கணக்கில் காத்திருக்கவேண்டிய நிலை இருந்துவருகிறது.

அதனை நீக்கும்பொருட்டு புதிய திட்டம்ஒன்றை கல்வி அமைச்சு ஜூலை மாதம் முதல் நடைமுறைப்படுத்த உள்ளது.

இதுசம்பந்தமாக அந்த அதிகாரி உதயனுக்கு மேலும்தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றபின் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக ஓய்வூதியம் பெறக் காத்திருக்கவேண்டிய நிலை இருந்துவருவது உண்மை.

இளைப்பாறும் ஆசிரியர்ஒருவர் தமது மாவட்டத்தில் செய்யவேண்டிய வேலைகளை முடித்துக்கொண்டு கல்வி அமைச்சுக காரியாலயத்துக்குத் தமது கோவைகளுடன் வந்து அமைச்சில் இருந்து தமது ஓய்வூதியத்தை விரைவுபடுத்துவதற்கான வேலைகளை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு அமைச்சில் கடமையாற்றுவதற்கு எந்தக் கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

இந்த நடைமுறை ஜூலை மாதம் முதல் நடைமுறைக்கு வரும்—என்றார் அந்த அதிகாரி.

## பாடசாலைக் கல்வி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் இந்தத் தொழில் பாடத்தில் சித்தி பெறும் மாணவருக்கு சிரேஷ்ட தராதர சான்றிதழ் வழங்கப்படும்.

★ ஆண்டு 12, 13ஆம் வகுப்புகளிலும் தற்போதைய பாடங்களுக்கு மேலதிகமாகக் குறிப்பிட்ட தொழிற்கல்விப் பாடம் தொடர்ந்து மாணவர்களுக்குப் போதிக்கப்படும்.

ஆண்டு 13இன் இறுதியில் அந்தத் தொழிற் கல்விப் பாடத்திற்குரியதொழில்நெறி தராதர சான்றிதழ் பரீட்சை நடைபெறும்.

★ இதேவேளை ஆண்டு 13இன் இறுதியில் ஜீ. சீ. ஈ. உயர்தரப் [பரீட்சையில்] தோற்றி, பல்கலைக் கழக அனுமதிபெறாதவர்கள் தாம் கற்ற தொழிற்கல்வித் துறையில் மேற்படிப்பைப் பெறுவதற்கு வசதிசெய்து கொடுக்கப்படும்.

இத்தகைய மாணவர்கள் தொடர்ந்து தமது தொழிற் கல்வியை தொழில்நுட்பக்கல்லூரிகளில் இரண்டு ஆண்டுகள் பெறுவர். அதன் முடிவில் அவர்களுக்கு அந்தத் தொழிற் பாடத்தில் தேசிய உயர்கல்விச் சான்றிதழ் வழங்கப்படும்.

★ தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று முடித்தவர்கள் தாம் கற்ற தொழிற்பாடம் தொடர்பாக இரண்டு வருட தொழிற்பயிற்சியைப்பெற்றுக் கொள்ள வசதிசெய்துகொடுக்கப்படும்.

இந்தத் தொழிற்பயிற்சியின் முடிவில் அவர்களுக்குதொழில் பட்டதாரி பட்டம் வழங்கப்படும்.

இந்த இருவருடகாலப்பயிற்சியைப் பயில்வோர் வேறு தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டே அந்தப் பயிற்சியைபெறவும் வழிசெய்து கொடுக்கப்படும்.

இந்த இரண்டுவருடகால [illegible] தற்கு வயதுக் கட்டுப்பாடு [illegible]

தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று ஒரு குறிப்பிட்ட தொழிலில் தேசியஉயர்கல்விச் சான்றிதழைப் பெற்றவர்கள் தாம்விரும்பிய வேளையில் எப்போதும் இரண்டுவருடகாலத் தொழிற் பயிற்சியைப் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-9]

## சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளின் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 15.00-16.00 | ரூ. 14.00-16.00 | ரூ. 20.00-22.00 |
| வாழைக்காய் | ரூ. 8.00-10.00 | ரூ. 8.00-10.00 | ரூ. 8.00-10.00 |
| பயிற்றங்காய் | ரூ. 8.00-10.00 | ரூ. 10.00-12.00 | ரூ. 18.00-20.00 |
| பாகற்காய் | ரூ. 8.00-10.00 | ரூ. 10.00-12.00 | ரூ. 18.00-20.00 |
| கோவா | ரூ. 14.00-15.00 | ரூ. 12.00-14.00 | ரூ. 18.00-20.00 |
| லீக்ஸ் | ரூ. 20.00-22.00 | ரூ. 20.00-22.00 | ரூ. 22.00-24.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 19.00-20.00 | ரூ. 18.00-20.00 | ரூ. 18.00-22.00 |
| பீற்றூட் | ரூ. 8.00-10.00 | ரூ. 8.00-10.00 | ரூ. 14.00-16.00 |
| பீன்ஸ் | ரூ. — | ரூ. 20.00-22.00 | ரூ. 22.00-24.00 |
| பூசணி | ரூ. 5.00- 6.00 | ரூ. 4.00- 6.00 | ரூ. 5.00- .700 |
| பச்சைமிளகாய் | ரூ. 18.00-20.00 | ரூ. 16.00-18.00 | ரூ. 18.00-20.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 50.00-56.00 | ரூ. 45.00-50.00 | ரூ. 58.00-60.00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 38.00-44.00 | ரூ. 35.00-40.00 | ரூ. 52.00-56.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 29.00-30.00 | ரூ. 28.00-30.00 | ரூ. 30.00-32.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 10.00-12.00 | ரூ. 8.00-10.00 | ரூ. 9.00-11.00 |
| வெண்டைக்காய் | ரூ. 18.00-20.00 | ரூ. 16.00-18.00 | ரூ. 20.00-24.00 |

## பிரேமாவுடன்...

ருக்கிறது. இதற்குக் காரணம் அரசே'' — இவ்வாறு விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அரசு புலிகளுடனான தனது உறவைச் சீர்படுத்தும் முயற்சியில் தற்போது ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடனான உறவைச் சீர்படுத்த அரசாங்கம் மூன்று அம்ச அணுகுமுறையில் செயற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

★ விடுதலைப்புலிகள் தவிர்ந்த — ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் உட்பட — ஏனைய தமிழ்க் குழுக்களுடனான உத்தியோக பூர்வப் பேச்சுக்களைத் தவிர்த்தல்.

★ தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்தல்.

★ மாகாணசபையைக் கலைத்து தேர்தலுக்கு திகதி நிர்ணயிப்பதன் மூலமும், அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான சட்டமூலத்தை அரசாங்கமே நாடாளுமன்றத்திற்கு கொண்டுவருவதன் மூலமும் சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அவசர அவசரமாக மேற்கொள்ளுதல்.

— இவையே அந்த மூன்று அம்ச அணுகுமுறை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். இளைஞர் நோர்வேயில் தஞ்சம்

ஒஸ்லோ, மே 30

ஈ. பி. ஆர். எல். எவ். ஐச் சேர்ந்தவரெனக் கூறிக்கொள்ளும் இளைஞர் ஒருவர் நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரியிருப்பதாக நோர்வே பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

பொலீஸார் நடத்திய விசாரணையில் அந்தநபர் மேற்கு ஜேர்மனியில் இருந்து டென்மார்க் வழியாக நோர்வேயை அடைந்தார் என்று தெரியவந்தது.

14 வயதான இந்த தமிழ் இளைஞருக்கு விசா வழங்க நோர்வே அரசு மறுத்துவிட்டது.

இந்த இளைஞனின் தாய் மேற்குஜேர்மனியில் வசித்து வருகிறார்.

இந்த இளைஞனை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## கூட்டத்தில் குண்டுவெடிப்பு; ஆறு பேர் காயமுற்றனர்!

கொழும்பு, மே 30

ஹெட்டிப்பொல என்ற இடத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட ஆளும் கட்சி அரசியல் பிரமுகர்களை நோக்கி இனந்தெரியாதோர் குண்டு வீசினர்.

அச்சமயத்தில் மேடையில் சுதேசவைத்தியதுறை அமைச்சர் எச். பி. வன்னிநாயக்கா உட்பட நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் சிலரும் இருந்தனர்.

குண்டு கூட்டத்தில் மத்தியில் விழுந்து வெடித்தது. ஆறு பேர் காயமடைந்தனர். அவர்களில் நால்வர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்கள்

கடந்த வெள்ளி இரவு நடந்த இச் சம்பவம் பற்றி பொலீஸார் விசாரணை செய்து வருகின்றனர். (உ-எ)

## மீன்பிடி அபிவிருத்தி---

[8 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமான ஆய்வுகளையும், அபிவிருத்திகளையும் மேற்கொள்ள இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித் தொழிலில் விஞ்ஞான ரீதியில், நவீன வசதிகளை மீன்பிடித் தொழிலில் புகுத்தும் வகையிலும், சமுதாயத்தில் மீனவர்களின் நிலையை முன்னேற்றஉதவும் வகையிலும் இந்த அமைப்பு ஆரம்ப வேலைகளை மேற்கொண்டுள்ளது.

மீன்பிடி ஆராய்ச்சிகளுக்கு நோர்வேயில் உள்ள பல்கலைக் கழகங்களுடன் இணைந்து செயற்படுவதற்கான ஒழுங்குகளும் செய்யப்படும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம், உலக விவசாய ஸ்தாபனம் ஆகிய நிறுவனங்கள் ஊடாகவும் உதவிகளைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மீன்பிடி அபிவிருத்தித் தளவல் நிலையத்தின் திட்டங்களுக்கு போரூட் நிறுவனம் முழு அளவில் உதவி வழங்கும்- என்றார். (அ-3)

## சிங்களத்தில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பான சுற்று நிருபம் தனிச் சிங்களத்தில் மட்டும் தயாரிக்கப்பட்டு, வடக்கு கிழக்கு தவிர்ந்த பகுதி மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கு மட்டுமே அனுப்பப்பட்டதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டதாக அந்த கல்விப் பணிப்பாளர் மேலும் சொன்னார்.

இதேவேளை-

மட்டக்களப்பு, கிளிநொச்சி மாவட்டங்களில் பயிலுநர் ஆசிரியர்தெரிவில் இந்தத்திட்டம் அமுல் செய்யப்படுவதாக அவ்வப்பகுதி கல்விப் பணிப்பாளர்கள்தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டக் கல்விப்பணிப்பாளர் அலுவலக அறிவித்தல் பலகையிலும் வன்செயல்களில் பாதிப்புற்றோரின் இரத்த உறவினர்களுக்கு பயிலுநர் ஆசிரியர் தெரிவில் முன்னுரிமை அளிக்கப்படும்,' என்ற தகவலை வெளியிடும் அறிவித்தல் ஒன்று ஒட்டப்பட்டிருப்பதாக அப்பகுதியிலிருந்து எமதுசெய்தியாளர் அறிவிக்கிறார். (உ-9)

## யானை தாக்கி ஐவர் காயம்

கிளிநொச்சி தேவிபுரத்தில் நேற்று நண்பகல் வீடொன்றினுள் புகுந்த யானை அங்கிருந்த குடும்பத்தவர்கள் ஐந்து பேரைத் தாக்கியது.

ரி. சிவபாக்கியம் (வயது 41) அவரது மகன் ரி. கண்ணன் (வயது 19) ஆகிய இருவருமே படுகாயமுற்றார்கள். அவர்களது குடும்பத்தவர்கள் மூவர் காயமுற்றனர். (உ-9)

## மருத்துவபீட நியமனம்

அச்சுவேலி, மே 30

அச்சுவேலி தங்கம் மருத்துவமனை தலைமை டாக்டர் திருமதி பாமலோஜனி பஞ்சலிங்கம் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட நுண்ணுயிரியல் பிரிவின் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். (ப-11)

யாழ். குளோபலின்

அரியசேவை!
ஆச்சரியமான பலன்;

கொழும்பிலும், உலகில் எப்பாகத்திலும் உள்ள உங்கள் உறவினர்களுடனும், நண்பர்களுடனும் நொடிப் பொழுதில் தொடர்பு கொள்ள எங்கள்

★ பாக்ஸ் [Fax] ★ டெலெக்ஸ்
★ டெலிபோன் சேவைகளை

உடனடியாக நாடுங்கள்!

கொழும்பு மாநகர எல்லைக்குள் உங்கள் பாக்ஸ் (Fax Messages) செய்திகள் உடனடியாக உரியவர்களிடம் கொடுக்கப்படும்

24 மணித்தியாலமும் உங்களுக்கு சேவை செய்ய காத்திருக்கிறோம்.

உங்கள் தேவையே எங்கள் சேவை!

இன்றே நாடுங்கள்!

குளோபல் கொம்யூனிகேசன்,
1/1, பவர் கவுஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி இல. 2239
(பாட்டா முன்பாக)

(சி/4615)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டது !

ஜூன் 23 S. L. A. S.
பரீட்சார்த்திகளுக்கான

# I. Q நூல்

[அண்மைய வினாத்தாள்களை அடிப்படையாகக் கொண்ட புதிய வெளியீடு]


ஆ. செந்தில்வடிவேல்
(M. A., S.L.A.S.)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள புத்தகசாலைகளில் ஜூன் 1 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

886, ஆஸ்பத்திரிவீதி
சுண்டுக்குளி.

(13295)


## ஓராண்டு நினைவு அஞ்சலி



### கிஸ்ணபிள்ளை - புஸ்பராசா
(கிப்பி)

தோற்றம்: 15-11-1953 மறைவு: 01-06-1989


பாசத்துடன் எம்மை வளர்த்த அன்பு அப்பாவே! -எங்களை
பாராமல் நீங்கள் பிரிந்ததேனோ! - உங்கள்
அன்பு முகம் பார்க்க ஓடோடி வந்தோம். நாம் வரு
முன்னே நீங்கள் இறைவனடி சேர்ந்ததேனோ
நீங்கள் எங்களையும் எங்கள் மண்ணையும் பிரிந்து இன்றோடு
ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும் எம் கண்களில் நீர்
வழிய மனமுருகி நிற்கின்றோம்.
உங்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
தாய், மனைவி, பிள்ளைகள்.

இருபாலை சந்தி
கோப்பாய்.

(13164)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வீரவாகு ஸ்ரீஸ்கந்தராஜா

தோற்றம்: 08 - 01 - 1955 மறைவு: 10 - 06 - 1989

திதி: 30 — 05 — 1990

பாசமெனும் வலைவிரித்துப்
பண்புடனே எமையாண்டு
தேசமெல்லாம் எமக்கீந்து
நெஞ்சமெலாம் நிறைந்த நீர்
சோகமெனும் இருளில் எமைத்தவிக்கவிட்டு
மேலுலகம் செல்லத் துணிந்தனையோ
ஓராண்டல்ல, ஆண்டு பல யுகங்களானாலும்.
உம் நினைவு எமைவிட்டு நீங்காது.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

தகப்பன், மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்,
பெறாமக்கள், மருமக்கள்.

கொள்வெளி,
துன்னாலை வடக்கு,
சரவெட்டி.

[3661]

சரியாகப் பயன்படுத்தினால்

# பனையிலிருந்து 801 பொருள்கள் தயாரிக்க முடியும்

## கூட்டுறவு உதவி ஆணையாளர் உரை

காங்கேசன்துறை மே 30

"சரியாகப் பயன் படுத்தினால் பனையிலிருந்து 801 பொருள்களைத் தயாரிக்கலாம் எனக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. எனவே தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் மதுபானவகை தயாரிப்புடன் நின்று விடாது வேறு பொருள்களை உற்பத்தி செய்வதிலும் நாட்டம் கொள்ள வேண்டும்."

இவ்வாறு தெல்லிப்பழை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து உரையாற்றிய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ரி. சபாரத்தினம் கூறினார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் திரு. க. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் தனித்து நின்று சாதிப்பதை விட கூட்டாகப் பல்வேறு சாதனைகளை ஈட்ட முடியும். அத்துடன் நிதானமான. ஒருமித்ததிட்டங்களையும்செயற்படுத்த முடியும்" என்றார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோண்டாவில் செயலகப் பொறுப்பாளர் அருண் மாஸ்டர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊழல் துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு இடம் கொடுக்காமல் செயல்பட வேண்டும் தொழிலாளர்கள் பாவனையாளர்கள் நலன்கள் பேணப்பட வேண்டும். எமது பிரதேச மூலவளங்களை தக்க முறையில் பயன் படுத்தி எமது மக்களின் உயர்வுக்கு வழி சமைக்க இச் சங்கங்கள் முன்வர வேண்டும் என்றார்.

மற்றும் வடமாகாணதெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கங்களின் சமாஜ பொது முகாமையாளர் திரு. கி. சிவநேசன் உட்பட பலர் உரையாற்றினர். (ப-68)

# நெருக்கடியான காலத்தில் மக்களுக்கு சேவை புரிந்தோர்

## சேவைநலன்பாராட்டு விழாவில்உரை

மயிலணி, மே 30

"உப அரசாங்க அதிபர் திரு. க மகாலிங்கமும் கிராம சேவையாளர்திரு. வி தில்லை நடராசாவும் மிகவும் நெருக்கடியானதோர் காலகட்டத்தில் மக்களுக்குச் சேவை செய்த சிறப்பான அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆவர். அவர்கள் பணி பாராட்டுக்குரியது."

மாற்றலாகிச் செல்லும் வலி. தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாலிங்கத்துக்கும், சுன்னாகம் கிராமசேவையாளர் திரு. வி. தில்லை நடராசாவுக்கும் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்ற சேவைநலன் பாராட்டுவிழாவில் தலைமை வகித்து உரையாற்றிய முன்னாள் வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழாவில் சுன்னாகம் தெற்கு கிராமசேவையாளர் திரு.வேலும்மயிலும், அதிபர் திரு. தட்சணாமூர்த்தி, ஆசிரியர் திரு.இராமசாமி, இளைப்பாறிய ஆசிரியர் திரு. சேனாதிராஜா, திரு. த மாணிக்கம், திரு. முத்துக்குமாரு, சட்டத்தரணி திரு. எஸ். பி. சிவநாயகம், திரு. சபா புஸ்பநாதன், ஆசிரியர் திரு. கமலநாதன், திரு. கென்றி ஆசிர்வாதம். திரு. தவவீரசிங்கம் ஆகியோரும் இவ்விருவரையும் பாராட்டிப் பேசினார்கள்.

பின் தேநீர் விருந்துபசாரமும் இடம்பெற்றது, பரிசில்களும் வழங்கப்பட்டன.

சுன்னாகம் மக்களின் அன்பளிப்பாக கிராமசேவையாளர் திரு. தில்லைராசாவுக்கு தங்கப்பதக்கம் அணிவிக்கப் பட்டது. சுன்னாகம் மக்கள் சார்பாக திரு. எஸ். பி. சிவஞானம் இதனை அணிவித்தார்.

இறுதியாக மாஜனாக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு. வே. கந்தையா நன்றியுரை நிகழ்த்தினார். (இ-89)

# எந்த ஒரு வல்லாதிக்கத்தாலும் எம்மை அழித்து விட முடியாது

## மந்துவில் கூட்டத்தில் ஆஞ்சநேயர்

கைதடி மே 30

எமது சுதந்திரப் போராட்டம் எந்த ஒரு வல்லாதிக்க சக்தியினாலும் அழிக்க முடியாத போராட்டமாகும். இன்று உலகிலேயே மிகவும் பலம் பெற்ற ஒரு விடுதலை இயக்கம் எமது இயக்கமாகும்.

வீரவேங்கைபைக்பைக்நினைவாஞ்சலிக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தமிழீழ விடுதலை புலிகள் மக்கள் முன்னணி வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் மேற்கண்டவாறு கூறினார்.

மந்துவில்பிரதேசப்பொறுப்பாளர் திரு. வேலுப்பிள்ளை தலைமையில் மந்துவில் பைக்பைக் (சிறீகாந்தன்) சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு ஆஞ்சநேயர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

நாம் இன்று ஒரு மூன்றாம் கட்டப்போருக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறோம். ஆகையால் நாம் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். எமது பலம் அதிகரிக்கப்பட வேண்டும். இந்திய இராணுவத்தைப் பொறுத்த வரையிலும் நாம் அவர்களுக்கோ அல்லது இந்தியாவுக்கோ எதிரானவர்கள் அல்லர். அவர்கள் எமக்கும் எமது தமிழ் மக்களுக்கும் தமிழ் மண்ணிற்கும் எதிராக போராட முற்பட்டபோதே நாமும் ஒரு அதர்ம யுத்தத்தை அவர்களுக்கு எதிராக மேற்கொண்டோம்.

இப்படி அவர் கூறினார். தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா பேசுகையில்இன்று பல இளைஞர்கள் உல்லாச வாழ்க்கைக்காக வெளிநாடுகளுக்குச் சென்று அலைகிறார்கள் ஏன் அவர்கள் எம்முடன் சேர்ந்து போராடக்கூடாது? தலைவர் பிரபாகரன் தலைமையில் வந்த போராளிகளாகிய நாம் எமக்கென ஒரு தமிழீழத்தை உருவாக்கி எமது சுய நிர்ணய உரிமையைப் பெற தொடர்ந்து போராட வேண்டும் அதற்கு நீங்களும் எம்முடன்சேர்ந்துஒன்றிணைந்து போராடுங்கள்.

இப்படி அவர் கூறினார். வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. குணம் பேசுகையில், எமது முன்னோர்கள் விட்ட பிழையினால் தான் நாம் இன்று ஆயுதம் ஏந்தும் நிலையில் இருக்கிறோம். ஆசையினால் நாமும் அந்தப் பிழையை விடாது முழுமையாக எமது உரிமையை பெற வேண்டும் என்றார்.

தென்மராட்சி மகளிர் படைப்பிரிவு பொறுப்பாளர் செல்வி அமுதினி பேசுகையில் இலங்கை அரசு தர மறுத்த சுய நிர்ணய உரிமையை வென்றெடுக்கவே நாம் போராடுகிறோம். எமது போராட்டம் மக்கள் போராட்டமாக பரிணமித்துள்ளது என்றார்.

கொடிகாமம் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு ராகுலன் பேசுகையில் எமது வீரர்களின் தியாகத்தால் தான் நாம் இன்று தலை நிமிர்ந்துநிற்கின்றோம். அந்த நிலை தொடர ஒரு சமதர்ம தமிழீழத்தை நாம் விரைவில் பெற வேண்டும் என்றார். (இ-74)

மக்கள் முகம்

### வர்த்தகர் சங்க நிர்வாகிகள்

மயிலணி மே 30

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் நடப்பாண்டு நிர்வாகிகளாக பின்வருவோர் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர் :- திரு. பா. கரிச்சந்திரன், [அக்குருமா விவசாயக் களஞ்சியம்] உப தலைவர் திரு. சி. முத்துக்குமாரு, காரியதரிசி திரு. சோ. அருணகிரிநாதன் [சக்தி பார்மஸி] உபகாரியதரிசி திரு. சி செல்வசீலன் தனாதிகாரி, திரு. சு அரசரத்தினம் [நாகம்ஸ் சினிமா] கணக்கு ஆய்வாளர் திரு. சு பன்னிருகரன்.

இக் கூட்டத்திற்கு சுன்னாகம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதேசப் பொறுப்பாளர் திரு. சிவா தலைமை தாங்கினார். [illegible]

# ஆங்கிலத்தை சிறுவயது முதல் கற்பிப்பது மிக அவசியம்

## சாவகச்சேரி விழாவில் உரை

கொடிகாமம் மே 30

"ஆங்கிலம் சர்வதேச மொழியாகும். ஆங்கிலத்தை சிறுவயது முதல் கற்பிக்க வேண்டும் -இதை கல்வி அமைச்சு நன்கு சிந்தித்து ஆண்டு மூன்று தொடக்கம் ஆங்கிலம் கற்பிக்க ஏற்பாடு செய்தமை மிகவும் வரவேற்கத்தக்கது."

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் நடைபெற்ற ஆங்கில தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட [illegible] திரு [illegible] வேலு இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திரு. ப. கைலேஸ்வரன் தலைமையில் நடந்த இவ்விழாவில் கொத்தணி அதிபர் திரு. சி. குகதாசன், வெளிக்கள ஆங்கில ஆலோசகர் (டிறிபேக் கல்லூரி) திரு எஸ். சுந்தரேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக்கலந்துகொண்டனர்.

ஆங்கில ஆசிரியை திருமதி [illegible] குமாரசாமி நன்றியுரைத்தார். (ப-75)

### பேச்சுப்போட்டி

மண்டைதீவு மே 30

மண்டைதீவு இந்து இளைஞர் திருமுறைக்கழகத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி தீவுப்பகுதி மாணவர்களிடையே பேச்சுப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

கீழ், மத்திய, மேல் பிரிவுகளாக நடைபெறும் இப் போட்டிக்கு மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ - 88

### மீள்பரிசிலனை

கடந்த டிசம்பரில் நடந்த ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையின் மீள் பரிசிலனை செய்யப்பட்ட பெறுபேறுகள் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல சொன்னார்.

பரீட்சை விடைத்தாள்களை மீள்பரிசிலனை செய்யக்கோரி பத்தொன்பதாயிரம் பேர் வரையில் விண்ணப்பித்திருந்தனர். (உ-எ)

அரியாலை- நொதேண் கிரிக்கெட்

# வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம் மே 30

அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணிக்கும் நொதேண் விளையாட்டுக் கழக அணிக்குமிடையில்நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலாவது இன்னிங்சில் அரியாலை அணியினர் 107 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். குகனேசன் 17, றொமேஸ் 16 ஓட்டங்களைப் பெற்றனர். நிரஞ்சன் 4 விக்கெட்டுகளையும் நாதன், துஷ்யந்தன் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய நொதேண் அணியினர் தமது முதல் இன்னிங்சில் 65 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர் குகனேந்திரா 8 விக்கெட்டுகளையும், பாபு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

அடுத்து தமது இரண்டாவது இன்னிங்சை ஆடத் தொடங்கிய அரியாலை அணியினர் 5 விக்கெட் இழப்பிற்கு 97 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர். ஜூலியன் ஆட்டமிழக்காமல் 21,றொமேஸ் 20, அகிலன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். துஷ்யந்தன் 3விக்கெட்டுகளைகைப்பற்றினார்.

வெற்றி பெறுவதற்கு 17 ஓவர்களில்140 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தமது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த நொதேண் அணியினர் ஆட்ட நேர முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 91 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். கரிஸ்சித்து ஆட்டமிழக்காமல் 28, துஷ்யந்தன்16 ஓட்டங்களைப் பெற்றனர். குகனேந்திரா, பாபு இருவரும் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினார். (இ-மு)

கிளிநொச்சியில்

# சைக்கிள், மரதன் போட்டிகள்

கிளிநொச்சி, மே 30

விளையாட்டுதுறை துணை அமைச்சினால் கிளிநொச்சி மாவட்ட உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையிலான மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் அண்மையில் நடத்தப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு. அமிர்தலிங்கம் தலைமையில் போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்றோர் வருமாறு;

26 மைல் மரதன் ஓட்டப் போட்டி.

1 ஆம் இடம்: வே. சிவனேசன், பளை உ. அ. அதிபர் பிரிவு, 2ஆம் இடம்: பொ. சுரேஸ் கிளிநொச்சி உ. அ. அதிபர் பிரிவு, 3ஆம் இடம்: வீ. சுந்தரகுமார் கண்டாவளை உ. அ. அதிபர் பிரிவு.

ஆண்களுக்கான 50 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி.


1 ஆம் இடம்: ஐ. விநாயகமூர்த்தி பளை உ. அ. அதிபர் பிரிவு. 2ஆம் இடம்: கு. நாகேந்திரன் கிளிநொச்சி உ அ. அதிபர் பிரிவு. 3 ஆம் இடம்: எஸ். சர்வேஸ்வரமூர்த்தி கிளிநொச்சி உ. அ. அதிபர் பிரிவு.

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி.

1 ஆம் இடம்: பி. இரஞ்சினிதேவி கிளிநொச்சி உ. அ. அதிபர் பிரிவு, 2 ஆம் இடம்: பி. செல்வராணி கண்டாவளை உ. அ. அதிபர் பிரிவு, 3ஆம் இடம்: கே. கலாஜினி. கிளிநொச்சி உ. அ. அதிபர் பிரிவு.

இப்போட்டிகளுக்கான ஒழுங்குகளை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. கனகராசாவும், பளை, பூநகரி விளையாட்டு அதிகாரி திரு. துரைசிங்கமும் மேற்கொண்டிருந்தனர். (ப-76)

## மூன்றாண்டு நினைவஞ்சலி



திரு.

### இராஜகோபால் இராஜ்மோகன்
(மருத்துவபீட மாணவன் பேராதனை)

அன்னைமடியில்: 07-03-1968 ஆண்டவன் அடியில்: 30-5-1987

அன்பினால் அறிவினால் ஆற்றலினால்
உறுதியான உழைப்பினால்
உயர்கல்வி என்று
மருத்துவபீடத்தில் தெரிவாகிநின்றாய்
வாழவிடவில்லை உன்னை
இராணுவத்தின் படுகொலை
ஆழமான உன்நினைவு
என்றும் அழிந்திடாது

குடும்பத்தினர்

திக்கம்.
அலவாய் மேற்கு.

(3660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனநாயகம் காக்கப்படும் என்று உறுதி தந்தால் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க ஆதரவு தருவோம்

## நாடாளுமன்றில் சு.க எம்.பி.

(உதயன் நாடாளுமன்றச் செய்தியாளர்)

கொழும்பு, மே 30

வடக்கு- கிழக்கு மக்களின் பிரச்சினைகள் கட்சிபேதம் இன்றி உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். விசேடமாக இளைஞர்களின் பிரச்சினைகளுக்கு அதிக முக்கிய த்துவம் அளிக்க வேண்டியது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இவ்வாறு கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் அவசர காலச் சட்டத்தை நீடிப்பது சம்பந்தமான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு. லஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும்பேசியதாவது:- நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்படும் என்று உறுதி மொழி தரப்பட்டால் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க நாம் ஆதரவுதருவோம். வடக்கு -கிழக்கு மக்களிடம் நாம் இனவாதப் போக்கை கடைப்பிடிக்கவில்லை. எமது கட்சிக்கு வடக்கு - கிழக்கில் பெரும்ஆதரவு இருந்ததை அரசாங்கம் மறந்துவிடக் கூடாது.

அவசரகாலச் சட்டத்தினை நியாயான முறையில் அமுல் செய்வதற்கு அரசுமுன்வரா விட்டால் பயங்கரவாதத்தினைத் தடுத்து நிறுத்தமுடியாது. அரசாங்கம் ஆயுதபலத்தாலும் அவசர காலச்சட்ட நீடிப்பாலும் ஆட்சியைத் தொடர்ந்து நடத்த முயல்வதைக் காணமுடிகிறது- என்றார்.

### காணாமற் போனோர் விவகாரம்

நவசமாஜக்கட்சி உறுப்பினர் திரு. வாசுதேவ நாணயக்கார பேசுகையில் காணாமற் போனவர்கள்பற்றிவிசாரிக்க ஒரு குழுவை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அவர் தயது பேச்சில் பின் வருமாறு குறிப்பிட்டார்.

அவசரகாலச்சட்டம்தொடர்ந்தும்இழுத்தடிக்கப்படுகிறது.

அரசு சதுரங்கம் ஆடுகிறது கைது செய்யப்பட்டவர்களை நீதி விசாரணைஇன்றிஅடைத்து வைத்து அரசு என்ன பயன் காண்கிறது. தவறு செய்தால் தண்டனை. தவறில்லை என்றால் விடுவிக்க வேண்டும். ஆனால் இந்நாட்டில் தொடர்ந்தும் மனித உரிமை மீறப்படுகிறது.

இதனால் நாட்டின் கௌரவமும் பாழாகிறது.

ஜனநாயகம் வாழ்ந்த நாடு இது காணமற்போனவர்கள் பற்றி பூரண தகவல்கள் இருக்கின்றன.

இது பற்றி ஆராய்வதற்கு ஏன் விசாரணைக்குழு நியமிக்க முடியாது? இதன் அர்த்தம் என்ன? யார் ஆட்களைகடத்தியதுஎன்றுஎமக்கு தெரியும் கண்டவர்சாட்சியம் அளிப்பதற்குக் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் இராணுவத்தின் மீது பாரம்போட்டு அரசு தப்பிக்கொள்ளப்பார்க்கிறது. இதற்கு எல்லாம் அரசே பொறுப்பு ஏற்கவேண்டும். பொறுப்பும் தைரியமும் இருந்தால் காணாமல்போனவர்கள் பற்றி ஆராய விசாரணைக் குழுவைஅரசு நியமிக்கட்டும்.

சந்தர்ப்பவாதக் கொள்கைகள் மூலம் இரகசிய ஒப்பந்தங்கள் மூலமும் தேசியபிரச்சனையைத் தீர்க்கமுடியாது என்று சொன்னார்.

### கிழக்கை பிரிக்கும் நிலை உருவாகும்

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஜனாப் எம். எச். எம் அஷ்ரப் பேசுகையில் தெரிவித்ததாவது:-

வடக்கு கிழக்கில் முஸ்லிம்களை ஆயுதப்பலத்தினால் நசுக்குவதற்கு மேலும் முயற்சிகள் எடுத்தால் முஸ்லிம்களும் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும்' வடக்கில் இருந்து கிழக்கை ''பிரிக்கவேண்டிய சூழ்நிலை'' யும் உருவாகும்.

முஸ்லிம்கள் இன்று துன்புறுத்தப்படுவது போல தொடர்ந்தும் துன்புறுத்தப்பட்டால் கிழக்கு மாகாணத்தை பிரிக்க வேண்டும் என்று நாம் உறுதியான கோரிக்கைவிடுக்க வேண்டி வரும்.

வடக்கு - கிழக்கு மக்களின் ஏகப் பிரதிநிதிகள் யார் என்பதை நானோ, விடுதலைப் புலிகளோ தீர்மானிக்க முடியாது. இவ்விடயத்தை மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

முஸ்லிம்களை அரசியல் பகடைக்காய்களாக பயன்படுத்த யாரும் முனையக் கூடாது. 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இன்று பயத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கடத்திச் செல்லப்பட்ட இளைஞர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை வடக்கு கிழக்கில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாக புரிந்துணர்வுடன் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் இன்று முஸ்லிம்களை இங்குதாழ்வாக பார்க்கும் நிலை ஏற்பட்டிருப்பது தவறானது.

இன்று அரசு வடக்கு - கிழக்கில் ஒரு பாசிச ஆட்சியை ஏற்படுத்திப் பார்க்க முயல்கிறது. அரசமைப்புக்கான ஆறாவது திருத்தச்சட்டத்தை நீக்க வேண்டுமென்றால் முஸ்லிம்களின் ஆதரவு தேவைப்படும் என்பதை அரசும் விடுதலைப்புலிகளும் உணர-வேண்டும் என்று கூறினார். (அ-2)

# இராமப்புறங்களில் வளமான வாழ்வுக்கு குடும்பக்கட்டுப்பாடு அவசியம்

கைதடி மே 30

கஷ்டப்பட்ட மக்கள்வாழும் கிராமப் புறங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம் அமுல் படுத்தப்பட வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கடைப் பிடித்து இரு குழந்தைகளை பெற்று வாழ்ந்தால் வாழ்வை வளமாக நடத்தலாம். அதையே குறிக்கோளாகக் கொண்டு ஒவ்வொரு குடும்பமும் வாழவேண்டும்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை தென்மட்டுவிலில் நடைபெற்ற குடும்பத்திட்டச் சங்கத்தின்தொண்டர் அறிமுக விழாவில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சுந்தரம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கடந்தபல ஆண்டுகளாக குடும்பத்திட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நடைமுறையில் இருந்தபோதும் இவை நகர்ப் புறங்களிலும், படித்தவர்களிடையேயும் தான் பயன் படுகின்றன. ஆகையால் இந்த குடும்பக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் கிராமப்புறங்களுக்கு கூடிய அளவில் விஸ்தரிக்கப்பட்டு அமுல் படுத்தப்படவேண்டும்

இப்படி அவர் கூறினார். (இ-74)

# லைசென்ஸ் இல்லாமல் 70 லட்சம் வானொலிகள்

கொழும்பு மே 30

இலங்கையில் 35 லட்சம் வானொலிகளுக்கே லைசென்ஸ்பெறப்பட்டுள்ளது 70 லட்சம் வானொலிகள் லைசென்ஸ் எடுக்கப்படாமல் பாவிக்கப்பட்டு வருகின்றன.

இத்தகவலை வெளியிட்டவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை இயக்குநர் திரு வி.ஏ. திருஞானசுந்தரம்.

கொழும்பு இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையிலே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:

★ 67 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 88 ஆம் ஆண்டுவரை நஷ்டத்திலேயே இயங்கிவந்தது முதல் நடவையாக 89 ஆம் ஆண்டுதான் 100 லட்சம் ரூபா லாபத்தைப் பெற்றது.

★ வானொலி நிகழ்ச்சி தயாரிக்கும் செலவிலும் பார்க்க தொலைக்காட்சிக்கு தயாரிக்க 10 மடங்கு பணம் செலவிடப்படுகிறது.

★ ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 50 ஆம் ஆண்டு கொள்வனவு செய்த கருவிகள்தான் உண்டு. அவை 30, 40 வீதம்தான் செயல்படுகின்றன.

★ கூட்டுத்தாபனத் தலைவருக்கு மாதம் 10 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது.

★ தமிழ் செய்தி அறிக்கையில் சில விடயங்கள் தாமதமாகவே வருகின்றன. முதலில் சிங்களத்தில் தயாராகி, பின் ஆங்கிலப் பிரிவுக்குப் போய் பின்புதான் தமிழ் பிரிவுக்கு வருவதால் தாமதமாகிறது.

இப்படி அவர் கூறினார். (இ - 3)

# வாகன வரி 10 சத வீத தண்டம்

யாழ்ப்பாணம், மே 30

யாழ் மாவட்டத்தில் வாகன வரி செலுத்தத்தவறியோர் அடுத்த மாதம் முதல் 10 சத வீதம் தண்டப்பணம் செலுத்த வேண்டும்.

வாகன வரி செலுத்த வழமையாக மார்ச்மாதத்துக்கு பின் 10 சத வீதம் கூடுதல் தண்டப்பணம் செலுத்த வேண்டும் என்பதே நடைமுறை ஆகும்.

ஆனால் யாழ் — செயலக இறைவரிப் பிரிவு பெப்ரவரி மாதமே இயங்க ஆரம்பித்ததால் தண்டம் பெறுவது பின்போடப்பட்டது.

ஆனால் அடுத்த மாதம் முதல் தண்டம் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# 6 மாத தடுப்புக் காவலின் பின் இ. தொ. கா பிரமுகர் விடுதலை

நுவரெலியா மே 30

ஆறுமாதகாலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் பிரிவின் தலவாக்கலை மாவட்ட அமைப்பாளரும், தொழில் உறவு அதிகாரியுமான திரு. பி. கோவிந்தராஜா விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன் விடுதலை செய்யப்பட்ட அன்றே திரு. கோவிந்தராஜாவும் நுவரெலியா நீதி மன்றத்தில் விடுதலை செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதி தீவிர வாத இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை பொலீசாரிடமிருந்து மறைத்து தனது வீட்டில் சில மாத காலங்கள் வைத்திருந்தார் என்று இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. (இ - 58)

## 500ரூபா கள்ளநோட்டு கடத்தல்:

# மேலும் இரண்டு தமிழர்கள் கொழும்பில் கைதாகினர்!

இரண்டு சாக்குகளில் ஐந்நூறு ரூபா கள்ள நோட்டுக்களை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மேலும் இரண்டு தமிழர்களை பொலீஸார் கைது செய்தனர்.

இவர்களில் ஒருவர் இரகசியப் பொலீஸாரிடம் தானாக சரணடைந்தார்.

அவர் கொடுத்த தகவலின் படி மற்ற நபர் மாபோலை என்ற இடத்தில் வைத்து பிடிக்கப்பட்டார்.

இது தொடர்பாக கொழும்பு தமிழ் வர்த்தகர் ஒருவர் கைதாகி, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே. (உ-எ)

# ஊர்காவலர் விலகினர்

கொழும்பு, மே 30

வெலிக்கந்தை பொலீஸ் பகுதியைச் சேர்ந்த பன்னிரண்டு ஊர்காவல் படையினர் தங்களுக்குச் சொந்தமான துப்பாக்கிகளை பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இராணுவத்தினர் தங்களைத் துன்புறுத்துவதாக அவர்கள் முறையிட்டனர்.

உகந்த சூழ்நிலை தோன்றும் வரை ஊர்காவல் படையில் இருந்து விலகிக்கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-எ)

# கம்யூ. கட்சியில் இந்திகா

கொழும்பு, மே 30

திரு. இந்திகா குணவர்த்தனா இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்துள்ளார்.

மக்கள் ஐக்கியமுன்னணித் தலைவரும் எம்பியுமான திரு. தினேஷ் குணவர்த்தனாவின் சகோதரர் இவராவார்.

இவர் பல மாதங்களாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்து பின்னர்விடுவிக்கப்பட்டுள்ளார். (உ-எ)


# பயிலுநர் ஆசிரியர் சான்றிதழ்

யாழ்ப்பாணம் , மே,30

பயிலுநர் ஆசிரியர்களுக்கான பயிற்சிச் சான்றிதழ்களை இன்று புதன்கிழமை யாழ். கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்று வந்த பயிலுநர் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 3 ஆம் திகதியுடன் முடிவடைகின்றன. (ஓ-10)


நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.






விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம் கடனுக வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரூ 35,000 செலவிட முடியுமானால் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது.

சந்தை... பாடசாலை... கோவில்... உறவினர் இல்லம் ... இப்படி எங்கு வேண்டுமானலும் பஜாஜில் உல்லாசமாகக் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி: 25701/2, 422149, 549480

பஜாஜ் பயணம் கோடி பெறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள்,
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
பட அல்பங்கள், படச்சுருள்கள்
இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.,

உதயன்

30 - 05 - 1990 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படபிரதி ஒன்று 3R/PC - 6/30, 5/90, 5/50
★ விநியோகம் ஒரு வாரம் [7 Days]
★ விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# யாழ். கோட்டைக்குள் இன்னும் தொண்டர் படையினர் இருவரே

யாழ்ப்பாணம் மே 30

குடிமக்கள் தொண்டர் படையைச் சேர்ந்த கடைசி இரண்டு பேரும் யாழ். கோட்டையில் இருந்து வேறு இடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஏற்கனவேயாழ்.கோட்டையில்தங்கியிருந்த 56 குடிமக்கள் தொண்டர் படையைச் சேர்ந்தவர்களில் 52 பேர் கட்டம் கட்டமாக திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டனர்.

ஏனைய நான்கு பேரில் இரண்டு பேர் தப்பி ஓடிவிட்டனர் என்றும் —

ஏனைய இரண்டு பேரும் தற்பொழுது யாழ்.கோட்டையில் தங்கி இருப்பதாகவும் பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இவர்களையும் வேறு இடத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை பலாலி இராணுவ முகாமிலும் 20 க்கு மேற்பட்ட குடிமக்கள்தொண்டர் படையினர் தங்கி உள்ளனர் என்று தெரியவருகிறது. (இ-10)

# யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயபீடத்தில் 6துறைகள்

யாழ்ப்பாணம் மே 30

புதிதாக இயங்கவிருக்கும் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தில் ஆறு துறைகளை ஆரம்பிக்க பல்கலைக்கழக மானியக்குழு அங்கிகாரம் வழங்கியுள்ளது.

கிளிநொச்சியில் இந்த விவசாய பீடம் அமைக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இந்த ஆறு துறைகள் இரண்டு உடனடியாக ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. அந்த இரண்டு துறைகளுக்கும் பொறுப்பாக பேராசிரியர் நித்தியானந்தன், பேராசிரியர் கந்தையா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

# நேர்முகப் பரீட்சை நடந்து 5 மாதமாகியும் நியமனமில்லை

யாழ்ப்பாணம், மே 30

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்துக்கு ஊழியர்களை நியமிக்க நேர்முகப்பரீட்சை நடத்தி மாதம் ஐந்தாகியும் நியமனம் வழங்கப்படவில்லை. இதனால் வேலைகள் தாமதமாவதாக தெரிவிக்கப்படுகிறது.

காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் யாழ்பிராந்திய அலுவலகத்தில் ஊழியர்களுக்கு பற்றாக்குறை நிலவியதை அடுத்து புதியவர்களை நியமிக்கும்படி தலைமையகத்தை பிராந்திய முகாமையாளர் கேட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து புதியவர்களை நியமிக்க நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் கடந்த ஜனவரிமாதம் நடைபெற்றன.

ஆனால் இதுவரை எவருக்கும் நியமனம் வழங்கப்படவில்லை. இதனால் அலுவலக வேலைகள் தாமதமாவதாகப் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (இ-3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### மாருதப்புரவல்லி திருநாவுக்கரசு

சித்தங்கேணியைச்சேர்ந்ததிருமதி. மாருதப்புரவல்லி திருநாவுக்கரசு அவர்கள் அவுஸ்திரேலியாவிலுள்ள அன்னாரது மருமகன் இல்லத்தில் சிவபதமடைந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற திருநாவுக்கரசு அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்ற திரு. கதிர்காமராசா, காலஞ்சென்ற திரு. சண்முகராசா, காலஞ்சென்ற திருமதி கமலாதேவி, செல்லத்துரை, திருமதி விமலாதேவி மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ஆ. செல்லத்துரை, (முன்னாள் அதிபர் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்), அவுஸ்திரேலியா திரு. க. மாணிக்கவாசகர், திருமதி. மகேஸ்வரிதேவி கதிர்காமராசா, (ஓய்வு பெற்ற ஆசிரியை) திருமதி. தனலட்சுமி சண்முகராசா (ஆசிரியை சைவமங்கையர் கழகம் கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
T. சிவமயம்

சித்தங்கேணி
(13302)

### கந்தர் சோமசுந்தரம்
[ஓய்வுபெற்ற P.W.D ஓவசியர்]

கட்டுடை வாசி கந்தர் சோமசுந்தரம் காலமாகிவிட்டார்.

அவர் திருமதி பரமேஸ்வரி தம்பிப்பிள்ளை, திரு. அப்பையா சுந்தரம்பிள்ளை ஆகியோரின் மாமனாரும், திருமதிகள் ஞானேஸ்வரி நல்லதம்பி, சரோஜினி இராசு ஆகியோரின் பாட்டனாரும், திருமதிகள் சற்குணம் செல்வத்துரை, மனோன்மணி மெய்ஞானமூர்த்தி, மகேஸ்வரி செந்திமாணிக்கம், பராசக்தி குகதாசன், ஞானாம்பிகை அமிர்தலிங்கம் ஆகியோரின் சிறிய தந்தையுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியை அவரது இல்லத்தில் இன்று (30-05 1990) முற்பகல் 11-00 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி பரமேஸ்வரி தம்பிப்பிள்ளை
கட்டுடைச் சந்தி,
கட்டுடை.
[13173]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30-05-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வவுனியா பாடசாலை மாணவருக்கு சில தினங்களில் உணவு முத்திரை

## துரித ஏற்பாடுகள் நடைபெறுகின்றன

வவுனியா, மே 30

வவுனியா மாவட்டத்தில் உள்ள 179 பாடசாலைகளைச் சேர்ந்த ஏறத்தாழ 33 ஆயிரத்து 950 மாணவர்களுக்கும் மதிய உணவுக்குப் பதிலாக உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக பாடசாலைகளின் அதிபர்கள் இதற்கான துரித ஏற்பாடுகளைச் செய்து வருவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மாணவர்களுக்கான இம் முத்திரை இன்னும் சில தினங்களில்- அடுத்த மாத முதல் வாரத்தில் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை போன்றவற்றால் தயாரிக்கப்பட்டதும், உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்கள் கிழங்கு வகைகள் என்பவற்றால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளுக்கு மாத்திரமே அன்றாடம் வகுப்பாசிரியரினால் பதிவு செய்யப்படும் விவரங்களின் அடிப்படையில் உணவு முத்திரைகளின் புள்ளிப் பெறுமதிகள் வழங்கப்படும்.

பாடசாலை கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட கூட்டுறவுச் சங்கங்களில் இவ் உணவு முத்திரைப் புள்ளிகளுக்கு உணவுப் பொருள்களும் பாடசாலை உபகரணங்கள் அப்பியாசக் கொப்பிகள் என்பவற்றை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்குரிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக செயலகத்தைச் சேர்ந்த உயரதிகாரிஒருவர் தெரிவித்தார்.

இதனிடையில் ஜி. சி. ஈ. (சா/த) மற்றும் ஜி. சி. ஈ. உயர் தர வகுப்புகளையுடைய சகல பாடசாலைகளிலும் இருநேரவகுப்புகள் நடாத்துமாறு பணிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவ்வாறே செயற்பட்டு வருவதாகவும் கடந்த இரண்டாம் திகதி தொடக்கம் சகல பாடசாலைகளிலும் மதிய உணவு நிறுத்தபட்டுள்ளதாகவும் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-174)

கருகம்பானையில் நிறுவப்பட்ட

# ஆரம்ப சுகாதார நிலையம் இன்று திறந்துவைக்கப்படும்

காங்கேசன்துறை, மே 30

கீரிமலை, கருகம்பானையில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் இன்று புதன்கிழமை பத்து மணிக்குத் திறந்துவைக்கப்பட இருக்கிறது.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் இந்த நிலையத்தைத் திறந்துவைப்பார். ஐ . நா. அகதிகள் ஸ்தானிகராலயம் இந்த நிலையத்தை அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த நிலையத்தில் பிரசவ வசதிகளும் செய்யப்பட்டுள்டுள்ளன.

இந்நிலையத்தின்மூலம் அப்பகுதி சாதாரணதர மக்கள் பெரும் பயன் அடைவர். [ஒ-68]

## இலவச கண்சிகிச்சை

சாவகச்சேரி மே 30

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் நாளை வியாழக்கிழமை பிரெஞ்சு நிபுணர் குழு ஒன்று இலவச கண்சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தும்.

வியாழக்கிழமைகள் தோறும் காலை 8 மணியிலிருந்து இக்குழுவினர் கண் நோயாளரைப் பரிசோதித்து ஆலோசனை வழங்குவார்கள். (உ-7)

சாவகச்சேரியில்

# தென்னந் தும்பு தொழிற்சாலை

சாவகச்சேரியில் 15 லட்சம் ரூபா செலவில் தென்னந்தும்புத் தொழிற்சாலை அமைக்கப்பட இருக்கிறது.

வடக்கு— கிழக்கு மாகாண சபை கைத்தொழில் அமைச்சால்இந்த தொழிற்சாலையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தென்னந்தும்பை கூடுதலாக உற்பத்தி செய்து யாழ்மாவட்டத்தில் உள்ள தும்பு சம்பந்தப்பட்ட கைத்தொழில்களுக்கு வழங்கவே இந்த தொழிற்சாலைஅமைக்கப்பட இருக்கிறது.

இந்த தொழிற்சாலைக்கான இடம் தெரிவு செய்யப்பட்டதுடன் இயந்திரங்களை கொழும்பில் கொள்வனவு செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-3)

காலம் கடந்த பிறப்பு, இறப்புப் பதிவுகள்:

# தாமதத்தைத் தவிர்க்க

## ஆவணங்கள் அவசியம்

கொழும்புத்துறை, மே 30

யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளர் செயலகத்தில் காலங்கடந்த பிறப்பு இறப்புக்களைப் பதிவு செய்வதில் தாமதம் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு,தேவைப்படும் ஆவணங்களை விண்ணப் படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்குமாறு செயலகம் அறிவுறுத்தியுள்ளது.

இணைக்கவேண்டிய ஆவணங்களின் விவரம் வருமாறு:-

★ உதவி அரச அதிபரால் மேலொப்பமிடப்பட்ட கிராம சேவையாளரின் அறிக்கை.

★ வைத்தியசாலை அத்தாட்சிக் கடிதம்.

★ திருமணச் சான்றிதழ்.

★ பிறப்புச் சம்பந்தப்பட்டவருக்கு நேர் மூத்த. நேர் இளைய பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்.

★ பிறப்புச் சம்பந்தப்பட்டவரது கல்வி கற்ற பாடசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட கடிதம்.

★ பிறப்புச் சம்பந்தப்பட்டவரது தடுப்பூசி ஏற்றியதற்கான அட்டை.

★ பிறப்புச் சம்பந்தப்பட்டவரது சாதகக்குறிப்பு/ஞானஸ்நான சான்றிதழ்.

★ இறப்புச் சம்பந்தப்பட்டவரது பிறப்புச் சான்றிதழ்.

★ ரூபா 40/- பெறுமதியான முத்திரை (ரூபா 10/- பெறுமதியான நான்கு முத்திரைகள்)

★ மரண விசாரணை நடைபெறவில்லை என்பது பற்றி மரண விசாரணை அதிகாரியிடம் இருந்து பெற்றுக் கொண்ட கடிதம். (ப-30)

# கிராமிய வீடமைப்புக் கடன்; விண்ணப்பப் படிவம் வருகிறது

யாழ்ப்பாணம், மே 30

கிராமிய வீடமைப்புக் கடனுக்கான விண்ணப்பப் படிவம் பெறாதவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம்வழங்கப்பட இருக்கிறது.

மேற்படி கடன் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஊடாக கடந்த 23ந் திகதி வரை வழங்கப்பட்டு வந்தன.

யாழ். மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் [illegible] கப்பட்ட 20 ஆயிரம் படிவங்களும் முடிவடைந்ததால்பலர் அவற்றைப் பெற முடியாமல் ஏமாற்றம் அடைந்திருந்தனர்.

இது சம்பந்தமாகத் தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரியிடம் விசாரித்த போது ''படிவங்கள் முடிவடைந்து விட்டன. புதிய படிவங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. அடுத்த வாரமளவில் மீண்டும் படிவங்கள் [illegible] (ஒ-3)

# யுத்த நிலையைத் தவிர்க்க 6 நாடுகள் சமரச முயற்சி

## இலங்கை சார்பில் சபாநாயகர்

கொழும்பு, மே 30

காஷ்மீர் பிரச்சினையால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில்யுத்த நிலை தோன்றி வருவதைத் தொடர்ந்து அதனைத் தவிர்க்கும் நோக்குடன் ஆறு நாடுகளைச் சேர்ந்த சமரசத் தூதுக்குழு ஒன்று இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் செல்ல உள்ளது.

இந்தத் தூதுக்குழுவில் இலங்கை சார்பில் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது அங்கம் வகிப்பார்.

இந்தோனேசியா, இலங்கை ஓர் அரபுநாடு உட்பட ஆறு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இத்தூதுக் குழுவில் அங்கம் வகிப்பர்.

இவர்கள் முதலில் இந்தியா சென்று காஷ்மீர் விவகாரத்துக்குப்பொறுப்பான அமைச்சர்ஜோர்ஜ் பெர்னாண்டஸை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் [அ]

# மீன்பிடி அபிவிருத்திக்கு யாழ்.நகரில் தகவல் நிலையம்

## போரூட் நிறுவனம் அமைக்கும்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீன்பிடித் துறையை விஞ்ஞானரீதியில் அபிவிருத்தி செய்ய உதவும் வகையில் ''மீன்பிடி அபிவிருத்தித் தகவல் நிலையம்'' ஒன்றை போரூட் அமைப்பு அண்மையில் யாழ். நகரில் ஆரம்பித்துள்ளது.

இருபது லட்சம் ரூபா செலவில் முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிலையம் காலக் கிரமத்தில்வெளிநாட்டு உதவிகளுடன் விஸ்தரிக்கப்படும்.

போரூட் அமைப்பின் வதிவிடப் பிரதிநிதி திரு. எரிஎரிக்சன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நோர்வேயிலிருந்து வந்துள்ள திரு எரிக்சன் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்தின் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வது சம்பந்

[5ஆம் பக்கம் பார்க்க]

# ராணுவ உடையில் சென்றோர் கொள்ளை

கொழும்பு,மே 30

அனுராதபுரம் பகுதியிலுள்ளகலன்லிந்துனவெவவில் நேற்று ராணுவ உடையில் சென்ற கோஷ்டி ஒன்று கடை உரிமையாளர் ஒருவரின் வீட்டில் கொள்ளையிட்டது.

89 ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டது (ஒ-3-2)

# முறைப்பாட்டு பிரதிகள் உடனுக்குடன்

யாழ்ப்பாணம், மே 30

யாழ். பொலீஸ் பிரிவில் மக்கள் தமது முறைப்பாடுகளின் பிரதிகளை உடனுக்குடனேயே பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கான நடவடிக்கையை பொலீஸ் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

தினமும் 45 க்கு மேற்பட்ட முறைப்பாடுகளுக்கு பிரதிகள் வழங்கப்பட்டு வருவதாக யாழ். பொலீஸ் முறைப்பாட்டுப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-10)

# மகவம் கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மே 30

மகவம் கலைஞர் அமைப்பு ''கலைத்திறன் வளர்ப்பரங்கம்'' என்ற நிகழ்ச்சியை இன்று புதன் மாலை 5 மணிக்கு குரும்பசிட்டி மதி மாயெழுவேல் நினைவுமண்டபத்தில்நடத்துகிறது.

விசேஷ நிகழ்ச்சியாக '' ஜேர்மனியில் தமிழ்க்கலை இலக்கியம்'' என்ற பொருளில் திரு. அரு. சிவேந்திரன் கருத்துரைவழங்குவார்.இதற்கான மாணவர்களது குறிப்புரைகள் போட்டிமுறையில் இடம்பெறவுள்ளன. வெற்றி பெறுவோருக்கு 'கலைத்திறன் ஊக்குவிப்பு உபகாரமாக 100 ரூபா வழங்கப்படும்.

# 'மத்திய வணிகம்' சஞ்சிகை வெளியீடு

யாழ் மத்திய கல்லூரி வர்த்தக மாணவர்மன்றத்தின் ''மத்திய வணிகம்'' சஞ்சிகை வெளியீட்டுவிழா இன்றுபுதன் முற்பகல் 10 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில்நடைபெறுகிறது.

கடந்த சில வருடங்களாக வெளிவராதிருந்த இச் சஞ்சிகை மாணவர்களது பெரு முயற்சியை அடுத்து இம்முறை வெளிவருகின்றது. (ப)

# ஹெலியின் சிதைவுகள் அமெரிக்காவுக்கு

கொழும்பு மே 30

சிகிரியாவில் விழுந்து நொருங்கிய இலங்கை விமானப் படை ஹெலிக்கொப்டரின் முக்கிய சிதைவுகள் அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

வடக்கு- கிழக்கு தவிர்ந்த

# ஏனைய மாவட்டங்களிலும் முஸ்லிம் காங். போட்டியிடும்

## பொதுச்சபைக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, மே 30

இனி நடைபெறும் தேர்தல்களில்வடக்கு,கிழக்குதவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை நிறுத்தும்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறியவந்தது.

விரைவில் நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-2-3)

# யாழ். பண்ணையிலிருந்து 26 பற்றரிகள் கொள்ளை!

யாழ். தொலைத்தொடர்பு திணைக்களத்தில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று 26 பற்றறிகள் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாக யாழ். பொலீஸ் பிரிவில் முறையிடப்பட்டுள்ளது.

ஆயுதங்களுடன் வந்த கோஷ்டி ஒன்று அங்கிருந்த காவலாளியை பயமுறுத்திவிட்டு இவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-10]

# கிளிநொச்சியில் மீண்டும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

யாழ்ப்பாணம், மே. 30

கிளிநொச்சியில் மீண்டும் காப்புறுதிக் கூட்டுத்தாபன அலுவலகம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 86 ஆம் ஆண்டு மூடப்பட்ட அந்த அலுவலகத்தை மீண்டும் ஆரம்பிக்க தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

பிராந்திய முகாமையாளர் கிளிநொச்சியில் புதிய கட்டடத்தை அமைப்பதற்கான இடத்தைத் தெரிவுசெய்து அங்கீகாரத்துக்காக கொழும்புக்கு அனுப்பியுள்ளார்.

அங்கீகாரம் கிடைத்ததும் அடுத்தமாத இறுதியில் அலுவலகம் இயங்கலாம் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். (இ-3)

## OBITUARY

### LEELA JOSEPH

Mrs. Juliet Grace Leela Joseph expired on 28-5-1990. Beloved wife of late Angelo Joseph (Technical Officer, Meesalai), daughter of late Julian Puvirajasinghe and of Mrs. Ruby Puvirajasinghe, loving sister of Rita (Vice - Principal, St. James Maha Vidyalayam), Bernard (Lever Brothers), Rosy (Teacher, St. Joseph College, Colombo), Andrew (U. K.), Daniel (Mayura Garments - Colombo), Agnes (Secretary, Y.W.C.A., Jaffna), loving sister-in-law of Dores Rajasingham (A. O., Vavunia), Mary (Insurance Corporation, Jaffna), Riyans Jenendran (Engineer, Colombo), Ganththi (U. K.), Maksy, Emil Satrukalsinghe (Winsor Theatre, Jaffna) and Miss Noeline Joseph.

Cortege leaving residence "Judes Villa", 19, David Road, Jaffna at 4 p. m. on 30-05-1990 to St. Mary's Cathedral burial grounds, Jaffna.

(C/4651) Informant: Ruby Puvirajasinghe

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org